Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 52 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை (01.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 15, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50



## மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு



02பக்கம்

# தென்னாபிரிக்க குடியிருப்பில் தீப்பரவல்

# 73 பேர் உடல் கருகி உயிரிழப்பு

08பக்கம்

# பொதுபெரமுன ஒரு கட்சியா?

## பகிரங்கமாக திட்டித் தீர்த்த மைத்ரி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த வகையிலும் தமக்கு சவால் கிடையாது எனவும் அதுவொரு கட்சியல்ல எனவும் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன, எதிர்காலத்தில் ஆட்சியமைப்பதற்காக தம்முடன் இணைந்துகொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது. பல்கலைக்கழகங்களில் ஆயிரக்கணக்கான பேராசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. ஆயிரக் கணக்கான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

பொலன்னறுவையில், காட்டுப் பகுதியில் பாரிய வைத்தியசாலையை நான் நிர்மாணித்தேன். வைத்தியர்கள் தங்குவதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தேன். அங்கு விசேட வைத்திய நிபுணர்கள் இருவர் இருந்தபோதிலும் அவர்கள் இருவரும் ஒரே நாளில் வெளியேறியுள்ளார்கள்.

02 பக்கம்





கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் ரந்தோலி பெரஹெரா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாரியார் பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிராந்திய சவால்களை எதிர்கொள்ளும் நோக்கம்

### இந்திய பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் குறித்து தகவல்



இந்து சமுத்திர பிராந்தியத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதற்காக இருதரப்பு இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

02 பக்கம்

## விசேட தேவைகளின் நோக்கம் கருதி

## 6,900 வாகனங்கள் இறக்குமதிக்கு அனுமதி



நாட்டில் வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும், விசேட தேவைகளுக்காக 06ஆயிரத்து 900 வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவற்றில் 03ஆயிரம் வாகனங்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு தேவையான ஜீப் மற்றும் முச்சக்கரவண்டிகளெனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், வாகன இறக்குமதிக்கான தடை படிப்படியாக நீக்கப்படுமென தெரிவித்துள்ள அமைச்சர், வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதிக்கான தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். கொவிட் - 19 தொற்று நெருக்கடியின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை காரணமாக வாகனங்கள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு செப்.05 இல்

### முல்லை நீதிமன்றம் தீர்மானம்




விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி கள் எதிர்வரும் 05ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்படு மென முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நேற்று (31) தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## மஹரகமவில் மாதந்தோறும் 1,200 புற்றுநோயாளர்கள்

### நன்கொடையாளர்களின் உதவியை நாடுகிறது வைத்தியசாலை

மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலையில் மாதந்தோறும் 950 முதல் ஆயிரத்து 200 வரையான நோயாளர்கள் புதிதாக அடையாளங் காணப்படுவதாக பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மாத்திரமல்லாது, உலகளாவிய ரீதியில் புற்றுநோய் தாக்கத்துக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து...

02 பக்கம்

## யால சரணாலயத்தில் குடியேறுவார் சஜித்

### ஐ.தே.க. பொதுச் செயலாளர் ரங்கே பண்டார ஊகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யால சரணாலயத்தில் குடியேறிவிடுவாரென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர்...

02 பக்கம்

## மூலதன அறிவு மாணவர்களுக்கு!

- விசேட திட்டத்தை அறிவித்தார் ரணில்
- முதல் கட்டம் கண்டியில் நேற்று ஆரம்பித்துவைப்பு



நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை பற்றிய சங்கங்களை நிறுவும் திட்டத்தின் முதலாவது நிகழ்வு கண்டி, நுகவெல மத்திய கல்லூரியில் நேற்று (31) முற்பகல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாணவர்களுக்கான மூலதன அறிவு குறித்த விசேட திட்டத்தை அறிவித்தார்.

02 பக்கம்

## உஷ்



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் முக்கிய புள்ளியாக இருந்து ரணிலுடன் மனஸ்தாபப்பட்டு வெளியில் வந்த மலிக் சமரவிக்ரம இப்போது மீண்டும் ரணிலுடன் செட் ஆகியுள்ளார்.

எதிர்க்கட்சி வரிசையில் உள்ள எம்.பிக்களை வளைத்துப்போட்டு ரணிலின் செல்வாக்கை அதிகரிக்க முயற்சிகளை எடுத்துவரும் மலிக், சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை கொழும்பில் சந்தித்து சுமார் 2 மணி நேரம் அரசியல் பேசியுள்ளார்.

வெகுவிரைவில் அரசியல் அரங்கில் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் சொல்கின்றன.

### கமெண்ட் கந்தர்...



சீனா விலையை வேற குறைச்சு கொடுக்கிறதாம்... எரிபொருள் ஒரிஜினலா இருக்குமோ அல்லது...?

## எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்தது சீன நிறுவனம்

### 03 ரூபா கழிவில் விற்பனை




சீனாவின் முன்னணி பெற்றோலிய நிறுவனமான சினோபெக் இலங்கையில் தனது உத்தியோகபூர்வ வர்த்தக நடவடிக்கைகளை கொழும்பு, மத்தேகொட எரிபொருள் நிலையத்தில் ஆரம்பித்துள்ளது.

மேலும், ஒரு லீற்றர் பெற்றோல் மற்றும் டீசலுக்கு 03ரூபா கழிவும் வழங்கப்படுவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடியை தீர்க்கும் முயற்சியில் இலங்கையில் எரிபொருள் இறக்குமதி...

02 பக்கம்

## எரிபொருள் விநியோகத்தை...

மற்றும் சில்லறை விற்பனை சந்தையை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அதனடிப்படையில் பெற்றோலிய பொருட்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலத்தின் ஊடாக எரிபொருள் இறக்குமதி, விநியோக செயற்பாடுகளை வெளிநாடுகளுக்கு வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம், ஐக்கிய அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு கடந்த மார்ச் மாதம் அனுமதியளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலங்கையில் பெற்றோலிய இறக்குமதி, இறக்குமதி, சேமிப்பு, விநியோகம், விற்பனை ஆகியவை தொடர்பான நீண்டகால ஒப்பந்தத்துக்காக சினோபெக் மற்றும் அதன் தாய் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவுக்கு வந்தன.

அதன் பின்னர் கடந்த மே மாதம் இலங்கை பிரதிநிதிகளுக்கும் சினோபெக் நிறுவன பிரதிநிதிகளுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதனடிப்படையில், இலங்கையில் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்குவதற்கு 20 வருட உரிமம் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் 50 புதிய நிரப்பு நிலையங்களுக்கு முதலீடு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டது.

இலங்கையில் இதுவரை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு மேலதிக இந்திய நிறுவனம் எரிபொருள் விநியோக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிராந்திய சவால்களை...

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் நிலையில், இலங்கை துறைமுகங்களில் கடற்படை கப்பல்கள் மற்றும் உளவுக் கப்பல்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 02, 03ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆயுதப் படையினரின் திறனை விருத்தி செய்வதற்கு இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும் இதற்கமைய இலங்கைக்கான 150 மில்லியன் டொலர் பாதுகாப்பு கடன் வசதியை இந்தியா நீடித்துள்ளதாகவும் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவின் ஆய்வுக்கப்பலான 'ஷி யான் 06' இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்திய பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூன்று நாட்களுக்கு...

நாட்டின் தென்மேற்கு பகுதி உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களுக்கு இன்றுமுதல் 03ஆம் திகதி வரையான மூன்று நாட்களுக்கு மழைபெய்வதற்கான வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும். மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## மஹரகமவில் மாதந்தோறும்...

வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். உணவு, சுற்றுச்சூழல் பாதிப்புகள், மது அருந்துதல், புகை பிடித்தல், மன உளைச்சல் ஆகியவை இதற்கு பிரதான காரணங்களாகுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

"குழந்தைப் பருவ புற்றுநோயாளிகளில் 75 முதல் 80 வீதமானவர்களை முழுமையாக குணப்படுத்த முடியும். புற்றுநோயை முதலில் கண்டறிந்த உடனேயே சிகிச்சையை தொடங்கினால் முழுமையாக குணப்படுத்த முடியும்.

எவ்வாறாயினும், புற்றுநோயாளர்களுக்குத் தேவையான பெரும்பாலான மருந்துகளை நன்கொடையாளர்கள் வழங்குகின்றனர். அவர்களின் சேவை மிக முக்கியமானதாகும். நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மருத்துவத் தேவையும் உயர்வடைந்துள்ளது. ஆகையால், நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்குரிய மருந்துகளை நன்கொடையாக பெற்றுத்தர விரும்புவோர் 0777 468503 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்" என்றார்.

## பொதுபெரமுன ஒரு கட்சியா?...

புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் கிடையாது. இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் நாம் புதிய திட்டம் ஒன்றை தயாரிக்கவுள்ளோம். ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு புதிய பாதையில் பயணிப்போம்.

எதிர்காலத்தில் அரசாங்கத்தை அமைப்பதுதான் எமது பிரதான நோக்கமாகும். அதனடிப்படையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது ஆண்டுவிழா செப்டெம்பர் 03ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்கால தேர்தலின்போது எவ்வாறான சவாலை ஏற்படுத்தும் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த வகையிலும் சவால் கிடையாது. அவர்கள் காடுகளில் தஞ்சமடைந்து எங்கு செல்வதென்று தெரியாமல் நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் தானே?

நான்கு மாதங்கள் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இறுதியில் அரச தலைவர் எங்கு சென்றார், அவருக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பில் தகவல் தெரியவில்லை. பிரதமரும் அமைச்சரவை அமைச்சர்களும் பதவி விலகினார்கள். உடனடியாக வெளிநாடுகளுக்குச் சென்றார்கள்.

மொட்டு கட்சிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு கிடையாது. மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு பெரும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். சிறு எண்ணிக்கையிலானோரை அழைத்துவந்து கூட்டம் நடத்துகிறார்கள். அவர்கள் விருப்பத்துடன் அங்கு செல்லவில்லை.

ஆதலால், பொதுஜன பெரமுன எமக்கு சவால் கிடையாது. அத்துடன் அதுவொரு கட்சியும் அல்ல. அதன் நிர்வாகம் எது, கொள்கை என்ன? அவ்வாறு எதையும் காண முடியவில்லை.

பொதுஜன பெரமுன மாத்திரமல்ல, நாம் அனைத்து உறுப்பினர்களையும் எங்களோடு இணைந்து ஆட்சியமைக்க முன்வருமாறு அழைக்கிறோம் என்றார்.

## யால சரணாலயத்தில்...

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரென்றால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச போட்டியிடுவதற்கு முன்வரமாட்டார். ஜனாதிபதித் தேர்தலில் டலஸ் அலகப்பெரும, மைத்ரிபால சிறிசேன, அநுரகுமார திசாநாயக்க அல்லது பகடைக்காயாக உள்ள ஒருவரைத் தெரிவுசெய்து போட்டியிடும் என்றார்.

## மூலதன அறிவு...

பங்குச் சந்தை மற்றும் நிதி அறிவாற்றல் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக ஜனாதிபதி அலுவலகம், கல்வியமைச்சு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குச்சந்தை என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. கல்வியமைச்சின் செயலாளர் எம்.எம்.ரணசிங்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சிந்தக மெண்டிஸ் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க ஆகியோர் இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

நுகவெல மத்திய கல்லூரியில் மூலதனச் சந்தை பற்றிய சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான பட்டயச் சான்றிதழ் மற்றும் ஒரு இலட்சம் ரூபா நிதி என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாடசாலை அதிபர் தம்மிக்க பண்டாரவிடம் வழங்கி வைத்தார்.

அத்துடன், மூலதனச் சந்தை பற்றிய அறிவைப் பெறக் கூடிய நூல்களின் தொகுப்பு ஜனாதிபதியின் கரங்களினால் பாடத்துக்குப் பொறுப்பான ஆசிரியை அச்சினி கனிடுவெவவிடம் கையளிக்கப்பட்டது.

கல்லூரியின் சித்திரப்பாட ஆசிரியை நயனா விஜேகோனினால் வரையப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்படமும் இதன் போது ஜனாதிபதியிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நாம் ஒரே இடத்தில் சுற்றிக் கொண்டு நின்றால் உலகம் நம்மைக் கடந்து செல்லும்" என்ற பாடலை மேற்கோள்காட்டி கல்வியமைச்சர் உரையாற்றினார். அதை மனதில் வைத்துத் தான் இன்று இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைத்தொழில்துறை யுகத்தின் அணுகுமுறைகளுடன் நாங்கள் நீண்ட காலமாக பணியாற்றினோம். அந்தக் கொள்கை அடிப்படையிலான அரசியலில் ஈடுபட்டோம். அதன் முடிவுகளை பற்றி இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில், பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் கொவிட் தொற்றுநோய் காரணமாக நாம் வங்குரோத்தடைந்த நாடாக மாறினோம். ஆனால் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றும் திட்டத்தை இப்போது ஆரம்பித்துள்ளேன். அதனை எமது அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

ஒரு நாடு என்ற வகையில் மீண்டும் படுகுழியில் விழாமல் எப்படி முன்னேறுவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். 20ஆம் நூற்றாண்டின் மத்தியில் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளைத் தொடர்வதா அல்லது புதிதாகச் சிந்தித்துப் புதிய பாதையில் செல்வதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். பழைய முறையின் கீழ் சென்றால், ஒரே இடத்தில் சுற்றுவதற்குக் கூட நாடொன்று எஞ்சாது. ஏனென்றால் இன்று நாம் இருக்கும் இடத்தில் ஒரு பாரிய இடைவெளி இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கக் காத்திருக்கும் தலைமுறைக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம் என்பதையும் கூற வேண்டும். எனவே தொழில்நுட்பத்துடன் புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். 21ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்ப வளர்ச்சியை பற்றி நான் சொல்லத் தேவையில்லை.

நாங்கள் பாடசாலையில் கற்கும் போது கிராமங்களில் ஒரு தொலைபேசி கூட இருக்கவில்லை. ஆனால் இன்று அனைவரிடமும் கைபேசி உள்ளது. சிலரிடம் இரண்டு கைபேசிகள் இருக்கின்றன. அதுதான் நிகழ்ந்துள்ள மாற்றமாகும்.

இந்த மாற்றத்துடன் நாம் முன்னேறும்போது, நவீன தொழில்நுட்பத்தை நாட்டுக்கு கொண்டு வர வேண்டும். அதற்காக பல பாரிய பணிகளை செய்து வருகிறோம். மேலும், கல்வியமைச்சு மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதன்படி, நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய தொழில்நுட்ப முறைகளை முடிவு செய்ய வேண்டும். பிளாக்செயின் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு,ஜெனொம் விஞ்ஞானம் என இவை அனைத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மேலும் இந்த தொழில்நுட்பத்தை கிராமத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். ஏனென்றால், புதிய தொழில்நுட்பத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வகையில் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகிறோம். நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேறும் போது இன்னொரு விடயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். தொழில்நுட்பம் மட்டும் போதுமானதல்ல. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. நாம் அனைத்து விடயங்களுக்கும் பணத்தை பயன்படுத்தும் சமூகம். இன்று அந்தப் பணம் மிகவும் திறந்த சந்தையில் பயன்படுத்தப்படுகிறது. பணப் பயன்பாட்டை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது. அமெரிக்க அரசாங்கமோ அல்லது சர்வதேச நாணய நிதியமோ அதைச் செய்ய முடியாது.

அன்று டிஜிட்டல் தொழில்நுட்பம் இருக்கவில்லை. இலங்கைக்கு இணையத்தைப் பெற 1993ஆம் ஆண்டில் நான் கையெழுத்திட்டேன். அதுவரை இந்த வசதிகள் எங்களிடம் இல்லை. இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம் நாம் மிகக் குறுகிய காலத்தில் உலகத்துடன் இணைந்துள்ளோம்.

மேலும், போட்டித்தன்மையான பொருளாதாரத்தில், எல்லைகளைப் பற்றி கவலைப்படாத நிதி முறைமையே உள்ளது. இது நல்லதோ கெட்டதோ அதை மாற்ற முடியாது. இந்த எல்லையில் இருந்து நாம் செயற்பட வேண்டும். உலகுக்குத் தேவையான பணம் இறுதியாக சந்தையில் இருந்து பெறப்படுகிறது. வங்கிகள் தங்களுக்குத் தேவையான பணத்தை வங்கிகளிடமிருந்து பெறுகின்றன. நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான பணத்தை பங்குச் சந்தையில் இருந்து பெறுகின்றன. அதற்கேற்ப பணம் பயன்படுத்தப்படுகிறது.

இங்கே மிக முக்கியமான விடயம் பணம். தனியார் துறையைப் போலவே, அரசாங்கமும் பணச் சந்தையைத் தான் தேர்ந்தெடுக்கிறது. திறைசேரி முறிகளை பெறுகிறோம். இன்று இந்த முறையைப் பற்றி உங்களை அறிவூட்ட அதன் ஒரு பகுதியைத்தான் இன்று ஆரம்பித்துள்ளோம்.

அதேபோல் அடுத்த வருடத்திலிருந்து மத்திய வங்கி அறிக்கைகளை பாடசாலைகளில் ஆராய்வதற்கு எதிர்பார்க்கிறேன். அது தொடர்பில் நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். அதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களை பயிற்றுவிப்பதோடு, வங்கி அதிகாரிகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கிறோம். அதனால் புதிய முறைமைகள் தொடர்பில் நாம் அறிந்திருக்க வேண்டும். அறிவை பெற்றுக்கொடுப்பதற்கு மாத்திரமன்றி நிதிப் பயன்பாடு, பிணையங்கள் உள்ளிட்ட அனைத்தையும் கிராமங்கள் வரையில் கொண்டுச்செல்ல வேண்டும். கிராமங்களில் திறமையானவர்கள் உள்ளனர். அவர்களுக்கு அவசியமான அறிவை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்று முழு உலகமும் ஒரே சந்தையாக இயங்குகிறது. அதனுடன் நாமும் இணைந்துகொள்ள வேண்டும். அதற்காக பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களையும் கைசாத்திட வேண்டும். சிங்கப்பூர், இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து, இந்தோனேஷியா, சீனா, மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்திவருகிறோம். ஜப்பான், கிழக்காசியா, தென்கிழக்காசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் புதிய சந்தைக்குள் பிரவேசிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் அவசியமான வசதிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் நாம் ஐரோப்பிய சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். இன்னும் இரு வாரங்களில் அமெரிக்க குழுவொன்று எம்முடன் பேச்சுவார்த்தைக்காக இலங்கை வரவுள்ளது. அதனால் உலக சந்தை மற்றும் அதற்கான ஒப்பந்தங்கள் தொடர்பில் நாம் அறிந்திருக்க வேண்டும்.

நாம் புதிய பசுமை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போகிறோம். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரத்தையும் கட்டமைப்போம். பசுமைப் பொருளாதாரத்திலும் பங்குப் பரிவர்த்தனை இருக்கும்.

அதற்குள் புதிய முறைமைகள் காணப்படும். அதேபோல் கடல்வழிப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளோம். அது தொடர்பில் லண்டனிலுள்ள விசேட சட்டத்தரணிகள் சங்கத்தினருடன் கலந்துரையாடி சட்டங்களை உருவாக்கி வருகிறோம். நாம் புதிய பொருளாதார முறையுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டுமா முடங்கிக் கிடக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

இன்னும் 10-15 வருடங்களாகின்ற போது, இங்குள்ள பலரும் 25-35 வயதை அடைந்திருப்பீர்கள். அதனால் உங்களுடைய எதிர்காலம் தொடர்பில் இன்றிலிருந்தே தீர்மானிக்க வேண்டும். அதற்கு அவசியமான அறிவை நாம் பெற்றுத்தருவோம். அதற்கான வேலைத்திட்டத்தினையே இப்போது ஆரம்பித்திருக்கிறோம்.

தற்போது 100 பாடசாலைகள் மாத்திரமே இந்த வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அந்த எண்ணிகையில் அதிகரிப்புச் செய்யப்படும். பங்குச் சந்தை, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு இயலுமை இருக்குமாயின் இந்த செயற்பாடுகளுடன் தொடர்ந்து கைகோர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒன்று அல்லது இரண்டு சங்கங்களை பொறுப்பேற்றுக்கொண்டு அவர்களுக்கு உதவிகளை வழங்குங்கள்.

இந்த வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக 10 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு இலட்சம் என்ற அடிப்படையில் கிடைக்கும். அதனை தவிர்ந்த எந்தவொரு தொகையினையும் இந்த திட்டத்துக்காக செலவிட வேண்டாம். இதனை ஒரு இலட்சத்துக்கு மட்டுப்படுத்துங்கள். வருட இறுதியில் எந்த பாடசாலை சிறப்பாக செயற்பட்டுள்ளது என்பதை தேடியறிவோம். வேலைத்திட்டத்தினை சரியான முறையில் நிறைவு செய்யும் பாடசாலையின் 10 மாணவர்களுக்கும் விடயம் சார்ந்த ஆசிரியருக்கும் சிங்கப்பூர் பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்துகொள்வதற்கான சுற்றுப்பயணத்துக்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

அதனாலேயே அந்த தொகையை ஒரு இலட்சத்துக்கு மட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டது. வறுமையான பகுதியாக இருந்தாலும் வளர்ச்சியடைந்த பகுதியாக இருந்தாலும் செலவு ஒரு இலட்சம் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டது. அதேபோல் இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கும் அந்த வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கிறோம். அதனூடாக புதிய பொருளாதார பாதைக்குள் பிரவேசிக்க முடியும். அதேபோல் 2048இல் அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த பொறுப்புகளை உங்களிடத்தில் கையளிக்கிறேன். இதற்கு பங்களிப்பு வழங்கி ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி என்றார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.08.30
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5222
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,160,648.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 6 4 9 2 2 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3464
சீட்டிழுப்பு திகதி 2023.08.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,927,326.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 12 30 37 48
விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49153

லக்கி 7
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 5 5 3 0 4 0
திகதி 30.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0048
L7 இலக்கம் 2 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,308,486.96

தன நிதானய
தேதி 2023/08/30
சீட்டிழுப்பு இலக்கம் 1252
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,178,871.20
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 09 14 74 79
விசேட ஆங்கில எழுத்து A
Double Chance இலக்கம் 30729

ராசி சப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 531
சீட்டிழுப்பு திகதி 2023-08-30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,643,311.60
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 17 20 38 60
விசேட இலக்கினம் கன்னி

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1570
30/08/2023
02251
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.406,024,480.00
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 09 48 49 57
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


## கொக்குத்தொடுவாய்...

கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி மனித எச்சங்கள் சில இனங்காணப்பட்டதையடுத்து, நீதிமன்ற அனுமதியுடன் மனித எச்சங்கள் இனங்காணப் பட்ட பகுதியில் கடந்த ஜூலை மாதம் 06ஆம் திகதி பூர்வாங்க அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு குறித்தபகுதி மனிதப் புதைகுழி என உறுதிப் படுத்தப்பட்டது.

இந் நிலையில் குறித்த மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நிலையில், ஓகஸ்ட் (31) நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் எதிர்வரும் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று அகழ்வுப்பணிகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர்பிரிவில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர், நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக கனரக வாகனத்தினால் குழிதோண்டியபோது, கடந்த ஜூன்மாதம் 29ஆம் திகதியன்று மனித எச்சங்கள் சில இனங்காணப்பட்டன.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கொக்கிளாய் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து அப்பகுதி குற்றப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு, பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அத்தோடு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதியன்று குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில் குறித்த மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் உத்தரவுக்கமைய, சட்டத்தரணிகள், சட்டவைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார், அரசியல்வாதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூக அமைப்புகள் ஆகிய தரப்புகளின் முன்னிலையில் கடந்த ஜூலை மாதம் 06ஆம் திகதியன்று பூர்வாங்க அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு இடம்பெற்ற பூர்வாங்க அகழ்வுப் பணிகளின் பிரகாரம் 13 இடங்களில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்டதுடன், அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்கள் தடயவியல் பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதனடிப்படையில் குறித்தபகுதி ஒரு மனிதப் புதைகுழி என உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு பூர்வாங்க அகழ்வின் மூலம் குறித்த பகுதி மனிதப் புதைகுழி என உறுதிப்படுத் தப்பட்டதையடுத்து, கடந்த ஜூலைமாதம் காலை 10.00மணியளவில் ஆரம்பமான பூர்வாங்க அகழ்வுப்பணிகள் மாலை 03.00மணியுடன் நிறுத்தப்பட்டன.

அத்தோடு, குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் ஜூலை மாதம் 13ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்றில், அகழ்வுப்பணிகளுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் அமைப்புகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்படும் எனவும் அந்த கலந்துரையாடலின் பின்னரே குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் குறித்த பூர்வாங்க அகழ்வுப் பணிகளின் நிறைவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில், கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்றில் அகழ்வுப் பணிகளுடன் தொடர்புடைய அமைப்புகள், திணைக்களங்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்தன.

அந்தவகையில், குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் ஓகஸ்ட் மாதம் 31இம் திகதி நேற்றும் இடம்பெற்றிருந்தன.

இந் நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையில் எதிர்வரும் 05ஆம் திகதி குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை அகழ்வாய்வு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி எஸ்.பிரணவன், சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், வி.கே.நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, வி.எஸ்.எஸ்.தனஞ்சயன், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் சட்டத்தரணிகளான எஸ்.துஸ்யந்தி, ஜெகநாதன் தர்ப்பரன், முல்லைத்தீவு மாவட்டசெயலக பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் உமாமகள் மணிவண்ணன், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா.சண்முகதாசன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ்மாஅதிபர் சமுத்திரஜீவ, முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்கிளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ்பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் முன்னிலையாகியிருந்தனர்.

இவ்வாறு அனைத்துத் தரப்பினரும் முன்னிலையாகியிருந்த நிலையில், அனைத்துத் தரப்பினருடைய ஒத்துழைப்புடன் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுமென முல்லைத்தீவு நீதிமன்றால் தீர்மானிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த சாவகச்சேரியில் சோதனை நடவடிக்கை



சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்தும் முகமாக சாவகச்சேரி பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில இடங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையிலேயே பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வயல், மட்டுவில், நுணாவில் ஆகிய கிராமங்களில் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களால் ஈட்டப்படும் நிதி மேற்பார்வை செய்யப்படும்

## அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் லசந்த அழகியவண்ண தெரிவிப்பு







உள்ளூராட்சி மன்றங்கள் கணக்காய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டாலும் குறித்த நிறுவனங்களால் ஈட்டப்படும் நிதி இதுவரை கணக்காய்வுக்கு உட்படுத்தப் படவில்லையென அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இதற்கமைய கணக்காய்வுக்கு உட்படுத்தப்படாத பிரிவுகளை கணக்காய்வுக்கு உட்படுத்துவது தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கவனம் செலுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2019/2020ஆம் ஆண்டுகளில் திருப்திகரமான செயற்றிறன் மட்டத்தை அடைந்த அரசாங்க நிறுவனங்களைக் கௌரவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 2004ஆம் ஆண்டு நான் பாராளுமன்றத்துக்கு வந்தபோது சில அரசாங்க நிறுவனங்களின் 1980ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளே சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. இருந்தபோதும் இந்தக் குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக இதுவரை பல்வேறு நிறுவனங்கள் உரிய முறையில் செயற்பட்டுவருகின்றன. அத்துடன், நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கும் நிலையில் இதிலிருந்து மீள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் சர்வதேச நிதி நிறுவனங்கள் மகிழ்ச்சி தெரிவித்திருப்பதாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர் வஜிர அபேவர்தன எம்.பி. குறிப்பிட்டார். அரசாங்கப் பொறிமுறை மற்றும் அரசியல் பொறிமுறை என்பன இணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மேலும் தமது நிறுவனங்களுக்குப் பொறுப்புக்கூறும் வகையில் சட்டங்கள் பலப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

2019/2020 ஆண்டுகளில், திருப்திகமான செயற்றிறனை வெளிப்படுத்தி அதிக மதிப்பெண்களைப் பெற்ற அரசாங்க நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேல்மாகாணத்திலுள்ள 45 அரச நிறுவனங்களுக்கு கோபா குழுவின் தலைவர் மற்றும் குழுவின் உறுப்பினர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேல் மாகாணத்துக்கு வெளியேயுள்ள 60 அரசாங்க நிறுவனங்களுக்கு மெய்நிகர் முறையின் ஊடாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ஜே.சி. அலவத்துவல, கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி.சி.விக்ரமரத்ன, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் செயலாளர் சிந்தா புலத்சிங்கள உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# நாடு கடத்தப்பட்டார் இலங்கைப் பிரஜை

யாழ். நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட பயணத் தடையையும் மீறி நாட்டை விட்டு தப்பிச்சென்ற சந்தேகநபர் மும்பை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேகநபருக்கு வெளிநாடு செல்ல பருத்தித்துறை மற்றும் மல்லாகம் நீதிமன்றங்களால் தடை விதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், பயணி ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் செல்வதை அவதானித்த அவுஸ்திரேலிய பெண் ஒருவர், இது விடயமாக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அதிகாரிகள் தேடுதல் மேற்கொண்டபோது அவரை கண்டறிய முடியவில்லை. பின்னர், சிசிரிவி பதிவுகளில் இருந்து பயணியை அடையாளம் கண்டு, அவரது கடவுச்சீட்டு மற்றும் விமானச்சீட்டு அனுமதி போன்ற கணினிமயமாக்கப்பட்ட விவரங்களை ஆய்வு செய்துள்ளனர்.

இதன்போதே அவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் பயணத் தடை விதிக்கப்பட்ட நபர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், விமானம் ஏற்கனவே இந்திய வான்வெளிக்குள் நுழைந்ததால், குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் குறிப்பிட்ட பயணி குறித்து மும்பை விமான நிலையத்தின் செயல்பாட்டு மேலாளருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே அவர் மும்பை விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார்.



கென்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கணா கணநாதன் சிம்பாவேயின் 2023 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்கான சிறப்புவாய்ந்த தேர்தல் குழுவுக்கான அவதானிப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலய மஹோற்சவத்தின் தீ மிதிப்பு வைபவம் நேற்றுமுன்தினம் இரவு (30) இடம்பெற்றது.

படங்கள்: மன்னார் நகர் நிருபர்

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்துகொள்ளுங்கள். தேவையற்றவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டாம்.

**ரிஷபம்:** உங்கள் காதலியுடன் உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள், தொழில், வியாபார லாபம் உண்டு.

**மிதுனம்:** நீங்கள் எதிர்பார்த்த தொழில் அமையும், குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**கடகம்:** கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயணத்தால் மனம் தடுமாறிக் கொண்டிருக்கும்.

**சிம்மம்:** உடல், மனம் சோம்பிக் காணப்படும், அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**கன்னி:** விவாகப் பேச்சுகளால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும். கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

**துலாம்:** நீண்ட நாள் நோயிலிருந்து விடுதலை, சத்துருக்களால் தன லாபங்கள் உண்டு.

**விருச்சிகம்:** தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும், குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

**தனுசு:** யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள், எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம்.

**மகரம்:** உங்களுக்கான நகை, உடைகளை வாங்குவீர்கள். துணிவோடு நடைபோடுவீர்கள்.

**கும்பம்:** கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள். மன தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

**மீனம்:** மன தைரியத்தடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**திதி:** துவிதியை பி.ப.11.50 வரை பின் திருதியை
**நட்சத்திரம்:** பூரட்டாதி பி.ப.2.56 வரை பின் உத்திரட்டாதி
**யோகம் :** மரண யோகம் பி.ப.2.56 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 6.06 – 7.06 மணி வரை
**ராகுகாலம்:** 10.36 – 12.06 மணி வரை
**எமகண்டம்:** 3.06 - 4.36 மணி வரை
**குளிகை:** 7.36 – 9.06 மணி வரை
**சந்திராஷ்டமம்:** கடக – சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்:** திருவாதிரை, சுவாதி, சதயம் புனர்பூசம், விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** ----

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# கோழி இறைச்சி 850 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு



ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை 850 ரூபாவுக்கு விற்பனை செய்யவேண்டும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இல்லையென்றால் கோழி இறைச்சியையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 1,300 முதல் 1500 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் காரணமாக கோழி இறைச்சி கொள்வனவு செய்வதை நுகர்வோர் குறைத்துக் கொண்டுள்ளனர்.

எனது கணக்கின்படி ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை 850 ரூபா வரைக்கும் விற்பனை செய்ய முடியும்.

எனவே, கோழி இறைச்சி விற்பனையாளர்கள் பிரச்சினையை சுமுகமாக தீர்க்க விரும்பாவிட்டால் கோழி இறைச்சியையும் இறக்குமதி செய்ய நேரிடும். நுகர்வோரை அசௌகரியத்துக்குள்ளாக்க இடமளிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தையில் தற்பொழுது ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 1,350 முதல் 1,400 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்வெசும திட்ட மேன்முறையீடு பரிசீலனை நடவடிக்கை முன்னெடுப்பு

அஸ்வெசும திட்டத்துக்கான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் என்பவற்றை பரிசீலனை செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஸ்வெசும திட்டத்துக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள மேலும் சில பயனாளர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை (இன்று) (01) முதல் வங்கிகளுக்கு விடுவிக்கப்படும்.

சுமார் 6 இலட்சம் பயனாளிகளுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை, குறித்த நலன்புரி திட்டத்துக்கான பணத்தை மக்கள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பௌர்ணமி தினத்தன்றும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி உள்ளிட்ட வங்கிகள் திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் துஷ்பிரயோகம்

## 5,456 முறைப்பாடுகள் பதிவு

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை 5,456 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவற்றுள் 242 முறைப்பாடுகள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவை எனவும் மேற்படி சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, 1,296 முறைப்பாடுகள் சிறுவர்கள் இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டமை தொடர்பானவை என தெரிவித்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, 163 பாரதூரமான காயங்கள் தொடர்பானவை எனவும் தெரிவித்துள்ளது.

சிறுவர்களை யாசகம் பெறுவதற்காக பயன்படுத்துவது தொடர்பில் 196 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இணைய பாதுகாப்பு தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சமூக ஊடகங்கள் இணையவெளியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 110 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| SG-HY - 9XXX | CMTSLMCMCG0104H000 | MOTOR CAR | MICRO PRIVILEGE |
| EP-KD - 0XXX | MAT6002676PR78072 | MOTOR CAR | TATA INDICA XETA |
| WP-KH - 8XXX | LLV2A3A1280800096 | MOTOR CAR | LIFAN LF7160E |
| CP-KF - 5XXX | ZC11S-117658 | MOTOR CAR | SUZUKI DBAZC11S |
| WP-CAF - 0XXX | ZVW353063938 | MOTOR CAR | TOYOTA PRIUS |
| WP-KJ - 0XXX | MA3EAA61S01708226 | MOTOR CAR | MARUTI ALTO |
| 14 - 0XXX | CSNC12AGU00600 | MOTOR CAR | MITSUBISHI LANCER GLX |
| CP-19 - 5XXX | KNADB2412S6405955 | MOTOR CAR | FORD FESTIVA GL |
| NW-PF - 7XXX | MR0FR29G001012639 | DUAL P. CAB | TOYOTA HILUX VIGO |
| 50 - 2XXX | LH20V378856 | DUAL P. VAN | TOYOTA LH20V |
| NC-PX - 2XXX | LVAV1JAB9DE380366 | MINI TRUCK | FOTON BJ1010V0JA32 |
| WP-DAC - 9XXX | LVAV1JAB4FE404656 | MINI TRUCK | FOTON BJ1008V0JA32 |
| SP-PP - 8XXX | LVAV1JAB3AE246335 | MINI TRUCK | FOTON BJ1010V0JA32 |
| SP-PX - 6XXX | MA1FA2HRRE6B22425 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| NW-PP - 5XXX | LVAV1JAB4AE243623 | MINI TRUCK | FOTON BJ1010V0JA32 |
| WP-DAB - 2XXX | LSYCJD2D2EG273103 | MINI TRUCK | BRILLIANCE SHINERY SY1020DB3AJI |
| NC-PR - 2XXX | LVAV3JA23BN012028 | MINI TRUCK | FOTON BJ1028V3JB3 RJ |
| NP-PS - 2XXX | MA1FA2HRRB6L21962 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| SP-PT - 4XXX | MA1FA2HRRC6D30280 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| NP-DAA - 5XXX | MAT524004FSR02176 | MINI TRUCK | TATA XENON LIGHT TRUCK |
| NW-PT - 3XXX | MA1FA2HRRC6D30070 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| WP-DAA - 2XXX | MA1FA2HRRF6B23148 | MINI TRUCK | MAHINDRA MAXIMO PLUS VX |
| EP-PT - 2XXX | MA1FA2HRRC6C25765 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| NW-DAB - 5XXX | MAT445235FZR21710 | MINI TRUCK | TATA ACE EX2 |
| EP-RF - 3XXX | NH7368378 | TRACTOR | NEW HOLLAND 4710 |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2023 செப்டெம்பர் 01, 02ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. செப்டெம்பர் 04ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2023 செப்டெம்பர் 04ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
**தொலைபேசி இல. 0112 000 000**
COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 01ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ரணிலின் நுண் அரசியல்!

குருந்தூர்மலை விகாரையை அண்டிய பிரதேச மக்கள் இதுவரையில் ஒற்றுமையாக செயற்பட்டனர். இருப்பினும், அண்மையில் குழுவொன்று அங்கு நுழைந்து குழப்ப நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது என ஆணமடுவே தம்மதிஸ்ஸி தேரர் தெரிவிக்க, அவருக்கு ஜனாதிபதி ரணில் அளித்துள்ள பதில் எமது கவனத்தை ஈர்த்துள்ளது.

(29) கண்டிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் அனுநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க தேரர்களான, வண. ஆணமடுவே தம்மதிஸ்ஸி தேரர் மற்றும் வண. வென்டருவே உபாலி தேரர் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி, அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க ஆனமடுவே தம்மதிஸ்ஸி தேரரைச் சந்தித்தபோது, விவசாய நவீனமயப் படுத்தல் வேலைத்திட்டம் உள்ளிட்ட நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் எடுத்துரைத்தார்.

"அதேபோல் குருந்தூர்மலை விகாரையை அண்டிய பிரதேச மக்கள் இதுவரையில் ஒற்றுமையாக செயற்பட்டனர். இருப்பினும், அண்மையில் குழுவொன்று அங்கு நுழைந்து குழப்ப நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. அதுபற்றிய விடயங்களைக் கண்டறிய வேண்டும்" - என ஆனமடுவே தம்மதிஸ்ஸி தேரர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே நான் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றேன். பௌத்த மத தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். வடக்கில் குருந்தி விகாரையின் பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிப்பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அப்பகுதி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ள நிலையில், வெளியிலிருந்து வந்த குழுவினரே முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளனர். அது தொடர்பில் வவுனியா மகாநாயக்க தேரரையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதனால் நாம் வெளியிலிருந்து அந்தப் பிரதேசத்திற்கு செல்வதற்கு எவரையும் அனுமதிப்பதில்லை. அது தொடர்பிலான விடயங்களைக் கண்டறியுமாறு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் சட்டத்திற்கமைய செயற்படுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் மகா விகாரையில் அகழ்வுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளோம். வடக்கில் இடம்பெறும் அகழ்வுகளின் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுப்போம்.

முன்னைய அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் அகழ்வுகளைத் துரிப்படுத்தியதாகக் கூறினீர்கள். இருப்பினும், அந்த ஆய்வு முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. தொல்பொருள் திணைக்களம் வழங்கும் தீர்மானத்திற்கமைய செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அந்தப் பகுதிகளைப் பாதுகாக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பௌத்த தலங்களைப் பாதுகாக்கும் அதேநேரம், முதலில் தொல்பொருளியல் ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதிகளில் மற்றைய மதம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் அதுபற்றி ஆராயவும் தயாராகவுள்ளோம். இருப்பினும், வெளியிலிருந்து வருவோர் அப்பகுதிகளுக்குள் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க நாம் இடமளியோம். அதற்காக மாகாண மதத் தலைவர்கள் குழுவொன்றை நியமித்து பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் எதிர்பார்த்துள்ளோம். அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது - என்று குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி .

தொல்பொருள் விவகாரத்தை ஜனாதிபதி ரணில் நேரடியாகவே கையிலெடுத்துள்ளமை தமிழர்களைப் பொறுத்தவரை ஆரோக்கியமான விடயமல்ல.இதன்மூலம் குருந்தூர் விவகாரத்தில் பிக்குகளே வெளியிலிருந்து ஆட்களை கொண்டு வந்து பிரச்சினையை ஏற்படுத்துகிறார்கள் என்பதை ரணில் சூசகமாகத் தெரிவித்தாரென ரணிலின் ஆதரவாளர்கள் குறிப்பிடுகின்றனர்.ஆனால், ரணிலின் இந்தக் கருத்தினால் பிக்குகளைவிட தமிழர்கள் அங்கு ஒன்றுதிரளமுடியாத ஆபத்தான நிலைமை உருவாகும் என்பதை உணர முடிகிறது.

ஜனாதிபதி ரணில் அடுத்தவருடம் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும்.

அதற்கு அரசியல் சக்திகளுக்கு அப்பால் மகாநாயக்க தேரர்கள் மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பௌத்த பீடங்கள், பேரினவாத சக்திகளின் ஆதரவு ரணிலுக்குத் தேவை.ஆதரவில்லாவிட்டாலும் அவர்களின் எதிர்ப்பு இல்லாமல் இருந்தாலே போதுமெனக் கருதுகிறார் ரணில். அப்படியான நிலைமையில் இருக்கும் ரணில், தொல்பொருள் விவகாரத்தை எடுத்து பேரினவாத சக்திகளுக்கு ஆதரவாக செயற்படப்போவதற்கான கட்டியமே தேர்களுடனான அவரின் சந்திப்பு.

பிக்குகள் வெளியில் இருந்து ஆட்கள் கொண்டுவருவதையோ அல்லது அவர்கள் குருந்தூர்மலையில் அணிதிரள்வதையோ ரணிலால் இலேசில் தடுத்துவிடமுடியாது.ஆனால், புதிய ஆணைகளைப் பிறப்பித்து படை அதிகாரத்தைக் கொண்டு தமிழர்கள் அங்கு அணிதிரள்வதை தடுக்க ரணிலால் முடியும்.அவர் அதனையே செய்யப்போகிறார் என்பது தெரிகிறது.

தமிழ் அரசியல்வாதிகள் ரணிலின் இந்த நுண் அரசியலை புரிந்துகொள்ளவேண்டும். அதற்கேற்றவகையில் தமிழர் பாரம்பரிய புனித பிரதேசங்களைப் பாதுகாக்க அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# தமிழறிஞர்களை ஒன்றிணைத்த தனிநாயகம் அடிகளார்



**தனிநாயகம் அடிகளாரது 43ஆவது நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

கிறிஸ்தவ பாதிரியாரானபோதும் தமிழ் ஆய்வுகளாலும் அறிவினாலும் ஆர்வத்தாலும் ஆற்றலாலும் பெருமைக்குரிய தமிழ் அறிஞரானவர் வண.கலாநிதி தனிநாயகம் அடிகளார் அவர்கள். அவரது 43 ஆவது நினைவுதினம் இன்றாகும்.

அவரது பெயரில் கொழும்பு பொரளையில் வண. கலாநிதி தனிநாயகம் அடிகளார் தமிழ் வித்தியாலயத்தை எனது மாகாணசபைக் காலத்தில் ஸ்தாபிதம் செய்தவன் எனும் வகையில் பெருமிதமடைகின்றேன்.

கத்தோலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் தமிழை முறைப்படி கற்றுத் தேர்ந்து ஒரு தமிழ் வளர்க்கும் - பரப்பும் தூதராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. 1945ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத்தையும், முதிர்ச்சியையும் கண்ட அண்ணாமலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் இரத்தினசாமி மற்றும் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோர் எடுத்த முடிவினால் இளமாணிப் படிப்பு முடிக்காமலேயே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வுசெய்து முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 1947 தொடக்கம் 1949 வரை 'தமிழ் இலக்கியத்தில் சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை' என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து எம்.லிட். பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டுசென்றுள்ளது. பின்னர் குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்றார். தனிநாயகம் அடிகளின் இயற்பெயர் நாகநாதன். புகழ்பெற்ற இந்துக் குடும்பத்தில் பிறந்தவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியபோது ஏற்றுக்கொண்ட பெயர் சேவியர் ஸ்ரனிஸ்லாஸ் என்பதாகும்.

ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கொழும்பில் சென்ட். பேர்னாட் செமினறியில் தத்துவவியலில் கலைமாணிப் பட்டத்தையும் (1934), தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும், M.Litt பட்டத்தையும் பின்னர் லண்டனில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

### ஆசிரியப் பணி

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம் புனித தெரசால் உயர்நிலைப்பள்ளியில் துணைத்தலைமையாசிரியராகப் பணியாற்றினார். இங்கிருந்தபோது பண்டித குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயின்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1961 இல் மலேசியா சென்று மலாயா பல்கலைக்கழகத்தில் 1969 வரை இந்தியக் கல்வியாய்வுகள் துறையில் தலைமைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அங்கிருந்து ஓய்வு பெற்றபின் ஓராண்டு காலம் பாரிஸில் பிரான்ஸுக் கல்லூரியிலும் ஓராண்டு காலம் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

### தமிழ்ப் பணி

கத்தோலிக்க துறவியாகத் தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் தமிழை முறைப்படி கற்றுத் தேர்ந்து ஒரு தமிழ் வளர்க்கும் - பரப்பும் தூதராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. Tamil Culture (தமிழ்க் கல்ச்சர்) என்ற ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். அதன் மூலம் அகில உலகத்திலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலர்களை ஒன்று சேர்க்க முற்பட்டு பெரும் வெற்றியும் கண்டார். 1961 இல் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (Academy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டார். 'தமிழ்த்தூது' என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார்.

### தமிழாராய்ச்சி நிறுவன தோற்றுநர்

மலேசியாவில் பணிபுரியும் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுநர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல் மாநாட்டை 1966 ஏப்ரல் 16 – 23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். பின்னர் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### மறைவு

அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் ஏப்ரல் 1980 இல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா.பொ.இரத்தினம் எழுதிய 'தமிழ்மறை விருந்து' நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதன்பின் பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார், 1980 செப்டெம்பர் 1 மாலை 6.30 மணியளவில் உயிர்நீத்தார்.

### தனிநாயகம் அடிகள் பற்றி காரையூர் நா.பொன்னையா

தனிநாயகம் அடிகளாரின் பெயரைக் கேட்கின்றபோதெல்லாம் எமக்கு நினைவில் வருவது 'தமிழ்க் கலாசாரம்' என்னும் முத்திங்கள் ஏடும் 1968ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாடுமே என்பதில் ஐயமில்லை. 'தமிழ்க் கலாசாரம்' என்னும் தீஞ்சுவையை அந்நிய மொழியாகிய ஆங்கில மொழிமூலம் தமிழர்களது கலை, இலக்கியம், பண்பாடு என்பனவற்றை உலகிற்கு பறைசாற்றி வந்துள்ளார் என்பதை தமிழர்களாகிய நாமறிவோம்.

'தமிழ்க் கலாசாரம்' என்னும் முத்திங்கள் ஏடு தமிழர்களுடைய கலை, இலக்கியம், பண்பாடு என்பவற்றை பறைசாற்றி வந்துள்ளது. இந்த ஏடு ஆற்றிவந்த அரும்பெரும் பணி மிகவும் மகத்தானது. இந்த ஏட்டை உலகை வலம் வரச் செய்த பெருமை பிதா தனிநாயகம் அடிகளாரையே சாரும். கத்தோலிக்க துறவியாகத் தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் காலப்போக்கில் தமிழ் மீது தீராக் காதல் கொண்டு அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்து ஒரு தமிழ் வளர்க்கும் - பரப்பும் தூதராகவும் 'தமிழ்க் கலாசாரம்' ஏட்டின் ஆசிரியராகவும் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

தமிழ்மொழி இந்துக்களுக்கு மட்டும் உரியதன்று. அது சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என அனைத்து மதத்தவர்களுக்கும் உரிய தனித்துவமான மொழி என்று உலகம் முழுவதும் இதன் சிறப்பை தனிநாயகம் எடுத்துரைத்தார். இதனால் சமய சமரசம் நிலவியது; உலக ஒப்புரவு காணப்பட்டது. இயேசுநாதரின் பொறையும் புத்தரின் அஹிம்சையும் நபிகள் நாயகத்தின் சகோதரத்துவமும் சைவரின் அன்பும், வைஷ்ணவரின் சரணாகதிக் கோட்பாடும் தனிநாயகம் அடிகளாரிடம் மலிந்து காணப்பட்டன என்றால் மிகையொன்றும் இல்லை.

தமிழாராய்ச்சி ஆங்கிலேயர் காலத்திற்குப் பின் விருத்தியடைந்ததென்பது தப்பான கருத்தென்பதும் 1500 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கள் அதற்குச் சான்று பகர்கின்றன என்பதும் அடிகளாரின் துணிந்த கருத்தாகும்.

இந்நூலை எழுதிய அடிகளார் இவ்வுலக வாழ்வை நீப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன் அவர் நிகழ்த்திய இரு விரிவுரைகளே இந்நூலாகும் என்பதையும் தமிழிலக்கியத்திற்கு அவர் கொடுத்த இறுதிச் சொத்தாகும் என்பதையும் இந்நூலைப் படிப்போர் அவதானிக்கக் கூடியதாகவிருக்கும்.

ஆதிகாலம், இடைக்காலம், நவீன காலம் என்ற முக்காலங்களிலும் தமிழாராய்ச்சி எவ்வாறு தொழிற்பட்டிருகின்றதென்பதை அடிகளார் மிக விரிவாகவும் - தெளிவாகவும் விளக்கியுள்ளார். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று அடிகளார் குறிப்பிடும் புறநானூற்று அடிகளும் இங்கு இடம் பெறுகின்றன. மிகத் தொன்மையான தமிழ் நாகரிகம் சிந்துவெளியில் ஆரம்பமாகி இந்தியாவிலும் இலங்கையிலும் பரவியிருந்தது என்ற ஆராய்ச்சிக் கருத்தை முன் வைத்தும் - ஆதரித்தும் அதற்கான எடுத்துக்காட்டுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

1966ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் பிரதம அதிதியாக வண. தனிநாயகம் அடிகளார் கலந்துகொண்டமை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு பெருமையைத் தோற்றுவித்தது. அவ்வரங்கில் அடிகளார் சுறுசுறுப்பாகவும் விவேகமாகவும் செயற்பட்டு மாநாட்டின் முன்னோடியாகவும் திகழ்ந்தமையைப் பல வட்டாரங்களிலிருந்து கிடைத்த புகழாரங்கள் சான்று பகரும்.

தனிநாயகம் அடிகளார் ஓர் அறிவாளி, ஆன்மீகவாதி. அத்துடன், ஒரு செயல் வீரன். உலகில் உள்ள தமிழர்களை- தமிழறிஞர்களை ஒன்றிணைத்த மாவீரன். பக்திச்சுவையும் மனிதாபிமானமும், பரந்தநோக்கும், தமிழிலுள்ள ஏனைய சிறப்புகள் என்றும் குறிப்பாக, தேவார, திருவாசகங்களிலும், ஆழ்வார்களின் திருப்பாடல்களிலும் பொதிந்தும் - மலிந்தும் கிடக்கும் பக்தியுணர்வை நாம் வேறெங்கும் காணமுடியாத பண்டம் என்று கூறுவார். அப்படி அவர் தமிழர்களின் மனதில் பதிந்துள்ள அழியாத நினைவுச்சின்னம் என்றே கூறலாம்.

**-கலாநிதி நல்லையா குமரகுருபரன்,
தலைவர் தமிழ் தேசிய பணி சபை**

# விலைபோகா தொழிற்சங்கப் போராளி பாலா தம்பு



பாலா தம்பு இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றில் பிரான்சிஸ் தம்பு பிலிப்ஸ், பியூடிஸ் தங்கம்மா சவரிமுத்து ஆகியோருக்கு நீர்கொழும்பில் பிறந்தார். தந்தை அன்றைய பிரித்தானிய ஆட்சியில் சுங்கத் திணைக்களத்தில் இந்தியாவில் பணியாற்றியவர். தாயார் பீட்ரிஸ், குருநாகலையில் அஞ்சல் அலுவலர் முதலியார் சவரிமுத்து என்பவருக்குப் பிறந்தவர். பாலா தம்புவுடன் பிறந்தவர்கள் ஆறு பேர். இவர்களில் மூன்று சகோதரர்கள் இளமையிலேயே இறந்து விட்டார்கள்.

நீர்கொழும்பு நியூஸ்டட் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்ற இவர், எட்டு வயதாக இருக்கும்போது தந்தை சென்னையில் வேலை பெற்றுச் சென்றபோது குடும்பத்தோடு இவரும் அங்கு சென்றார். ஆனால், அங்கு பாடசாலையில் இடம் கிடைக்காத காரணத்தால் சில காலம் வீட்டிலேயே இருந்து படிக்க நேரிட்டது. பின்னர் பிஷொப் கொட்டன் பாடசாலையில் சேர்ந்து படித்தார். பின்னர் இலங்கை திரும்பி கொழும்பு ரோயல் கல்லூரியில் இடைநிலைப் படிப்பைத் தொடர்ந்தார்.

பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு 1939ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று 1943 இல் அறிவியலில் இளமாணிப் பட்டம் பெற்று வெளியேறினார். லண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து தாவரவியலில் சிறப்புப் பட்டம் பெற்றார். 1944 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மைத்துறையில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் இலங்கை சட்டக் கல்லூரி சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...)

# இன்றைய நாளில்...

- 1449 – மங்கோலியர்கள் சீனப் பேரரசரைக் கைப்பற்றினர்.
- 1798 – இலங்கையில் முதலியார் வகுப்பை பிரித்தானிய இலங்கையர் மீண்டும் உருவாக்கினர்.
- 1804 – சிறுகோள் பட்டையில் உள்ள மிகப்பெரும் சிறுகோள்களில் ஒன்றான யூனோ ஜேர்மனிய வானியலாளர் கார்ல் ஹார்டிங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1859 – சூரியப் புயல் இடம்பெற்றது.
- 1914 – 'மார்த்தா' என அழைக்கப்பட்ட கடைசிப் பயணிப் புறா சின்சினாட்டி மிருகக்காட்சிச் சாலையில் இறந்தது.
- 1969 – லிபியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் முஅம்மர் அல்-கடாபி ஆட்சியைப் பிடித்தார்.
- 1979 – நாசாவின் பயணியர்-11 ஆளில்லா விண்கலம், சனி கோளை 21,000 கி.மீ. தூரத்தில் அடைந்தது. இதுவே முதன்முதலில் சனியை அடைந்த விண்கலம் ஆகும்.
- 1984 – யாழ்ப்பாணம் திக்கத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 20 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 2007 – மன்னாரில் பாசித்தென்றலில் இலங்கை இராணுவத்தினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் 8 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

# நக்கல் நமசிவாயம்

திருப்பி ஜனாதிபதியா வாறதுக்கு தம்மால் முடியும் எண்டு சொல்லுறார் மைத்ரி.. மருந்து தட்டுப்பாடு எவ்வளவு தீவிரமா இருக்குது எண்டது இப்போதான் விளங்குது பாருங்கோ...



# "உலக தெங்கு தினம்"

# சர்வதேச மட்டத்தில் சிலோன் கொக்கனட் என்ற அடையாளப்படுத்தலை நிலைநாட்டுவதே எமது பிரதான நோக்கமாகும்

எமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான பயிராக தேங்காய் காணப்படுகிறது. இன்றைய பூகோள மயமாக்கலின் வெவ்வேறான தேவைகளை நிறைவு செய்வதற்கும் பரந்துபட்ட பயிராகவும் இது நிலைத்து நிற்கிறது. இதனாலேயே இன்று இப்பயிரானது தெங்கு கைத்தொழில் என்ற பரந்தளவிலான எண்ணற்ற கைத்தொழில் பேட்டைகளைக் கொண்டவையாகக் காணப்படுகிறது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை தெங்கு பயிர்ச்செய்கை பற்றிய ஒரு திறந்த கலந்துரையாடலை முன்னெடுப்பதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் பேராசிரியர் ரொசான் பெரேரா மற்றும் பணிப்பாளர் நாயகம் ஜனக பிரேமரத் போன்றோர் எம்மோடு இணைந்து கொள்கிறார்கள்.

**தெங்கு அல்லது தேங்காய் அபிவிருத்தி அதிகார சபை என்றால் என்ன? அது தொடர்பான விவரணத்தை மேற்கொள்ள முடியுமா?**

தேங்காய் அபிவிருத்தி அதிகார சபை என்பது தென்னம் உற்பத்தி, தேங்காய் ஏற்றுமதி மற்றும் அதனோடு தொடர்புடைய துறைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான சட்டம் 1971 இலக்கம் 46 என்ற பாராளுமன்ற சட்டத்திற்கமைவாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இதன் பிரதான நோக்கமாக தென்னம் தொழிற் பேட்டைகளை போதுமான அளவிலும் மற்றும் அதன் தன்மைகளை விஸ்திரப்படுத்துவதற்கும் தென்னையின் கேள்விகளை அதிகரித்துக்கொள்வதற்கும் உற்பத்தித் திறன் ஊடாக ஏற்றுமதியை வலுப்படுத்திக்கொள்வதற்குமான சிறந்தொரு சுற்றுச்சூழலை நிர்மாணிப்பதுமே இதனுடைய பிரதான பணியாகும்.

**சர்வதேச தேங்காய் தினம் கொண்டாடுவதற்கான காரணம் யாது?**

தேங்காயானது எங்களுடைய வாழ்க்கையின் அத்தியாவசியமானதும் அதேநேரம், நெருக்கமானதுமாகும். இந்தக் கைத்தொழில் பேட்டை பற்றி பெரும்பாலானவர்கள் கூறும் கருத்தானது, எவ்வித அனுபவங்களுமற்ற மேலோட்டமான கருத்துகளாகும். இதனாலயே சர்வதேச தேங்காய் தினம் என்ற ஒரு தினத்தை ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்வாறு ஒரு தினத்தை ஏற்பாடு செய்து அதனூடாக எதிர்பார்ப்பது யாதெனில், தென்னம் கைத்தொழில் மற்றும் இக்கைத்தொழில் பற்றிய விசேட முக்கியத்துவங்களை மக்களிடம் கொண்டு செல்வதற்காகும். சாதாரணமாக தென்னம் பூக்களில் இருந்து தேங்காய் பிஞ்சுகள் உருவாகுவதற்கு ஏறத்தாள ஒரு வருட காலம் அவசியமாகும். உண்மையில் இது ஒரு புதுமையானதாகும். இதை விட புதுமையானது யாதெனப் பார்ப்போமானால், மரத்திலிருந்து கொய்யப்பட்ட தேங்காய்கள் நம் நாட்டிலுள்ள சுமார் 150 உற்பத்தி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதில் சுமார் 40 உற்பத்திகள் மாத்திரமே சர்வதேச மட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தெங்கு அபிவிருத்தி அதிகார சபை என்ற வகையில் எங்களுடைய நோக்கமானது இங்கிருக்கின்ற அனைத்து உற்பத்தி நிலையங்களூடாகவும் ஏற்றுமதி உற்பத்தியை அதிகரிக்கும் அதே நேரம், அந்நிய செலாவணியை கூடுதலாகப் பெற்றுக்கொண்டு நம் நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்துவதாகும். இப்பணிக்காக கைத்தொழில் பேட்டைகளின் தரத்தை மேம்படுத்துவதும், இதனை அபிவிருத்தி செய்யும் போது ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு புதிய அணுகுமுறைகளோடு சர்வதேச தேங்காய் தினத்தைக் கொண்டாடுவது என்பதும் சிறப்பம்சமாகும்.

**வடக்கில் இருந்து தேங்காய் (தென்னை) முக்கோணம் தயாரிப்பதற்கான ஏதேனும் திட்டங்கள் இருக்கின்றனவா?**

தென்னை தொழில் வளர்ச்சியை முன்னெடுக்கும் நோக்கிற்கமைவாக, அதிகளவிலான தேங்காய்கள் உற்பத்தி செய்யும் பிரதேசங்களான சிலாபம், கம்பஹா, குருணாகல் மற்றும் புத்தளம் பிரதேசங்களை கேந்திர மையமாகக் கொண்டு தென்னை முக்கோண வலயம் அடையாளப்படுத்தப்பட்டது. இப்பிரதேசங்களில் பயிரிடப்படும் தென்னை பயிர்ச்செய்கை பற்றிய விசாலமான விழிப்புணர்வு ஏற்பட்டது. மட்டுமன்றி, தென்னம் உற்பத்தியுடன் தொடர்புடைய வெவ்வேறு வகையான தொழிற்பேட்டைகளும் இப்பிரதேசங்களில் அறிமுகமாயின. இவ்வலயத்திற்கு உட்பட்ட பிரிவில் பெரு வாரியான அபிவிருத்திகளும் தொழில் வாய்ப்புகளும் அதிகரித்த வண்ணம் காணப்பட்டன. எங்களது முதலாவது முக்கோண வலயத்தினூடாக வருடத்திற்கு ஒரு பில்லியன் தேங்காய் கிடைக்கப்பெற்றது. இதற்கப்பால் வேறு வழிகளிலிருந்து ஒன்றரை பில்லியனுக்கும் மேற்பட்ட தேங்காய்களையும் நாம் பெற்றுக்கொண்டோம். பெரும்பாலும் உணவிற்காகப் பெற்றுக்கொள்ளும் தேங்காய்களானது அதிகூடிய அளவில் நாசமடைந்து பாவனைக்கு உட்படாமல் நாசமாகின்றன. உதாரணத்திற்கு நாம் ஒன்றைக் கூறுவோமானால் ஒரு தேங்காயில் இருந்து நாம் பால் எடுத்தாலும் கூடியது அந்தத் தேங்காயை நாம் முழுமையாக பிரயோசனப் படுத்துவதில்லை. இதனால் நாங்கள் முழுமையான பயனை அடைவதுமில்லை. இவ்வாறாக பரந்து விளைச்சல் செய்யும் தென்னம் உற்பத்தியை ஒரு மத்திய நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு தென்னம் முக்கோண என்ற செயற்றிட்டம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இதனால் தேங்காய் முக்கோணம் தென்னை தொழில் வளர்ச்சிக்கான செயற்றிட்டம் வடக்கு போன்று தேங்காய் உற்பத்தி செய்யும் விசாலமான பிரதேசத்திலும், அதேபோன்று மிகுந்த அக்கறையுடன் முன்னெடுக்கும் பெரும் பரந்த பூமியில் முன்னெடுத்துச் செல்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் அதேசமயம், வடக்கு பிரதேசத்தை ஒட்டிய இவ்வாறான அவிருத்தி செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கும் தென்னம் அபிவிருத்தி அதிகார சபை என்ற வகையில் பெரும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம்.

**இப்போதைக்கு தென்னம் தொழிற்பேட்டைக்கு தேவையான அத்தியாவசிய மூலப்பொருட்கள் ஏதும் பற்றாக்குறையாக உள்ளனவா?**

இதுவரையில் எங்களுடைய பிரதான முக்கோண தேங்காய் தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய இரண்டாயிரத்துக்கும் உட்பட்ட தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இத்தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பதற்கு தடைகளாக அமைவது மூலப்பொருட்கள் தாராளமாக கிடைக்காமையே. குறைந்த வரையறுக்கப்பட்ட மூலப்பொருட்களுக்கு தொழிற்சாலைகளுக்கிடையே கடும் போட்டிகள் நிலவுவதால் எதிர்காலத்தில் இத்தொழிற்சாலைகள் செயலிழந்து செல்வதற்கான கடும் போக்குகள் நிலவுகின்றன. நான் முன்னர் குறிப்பிட்டது போல இவ்வலயத்திற்கு வெளியில் இருந்து கிடைக்க வேண்டிய இரண்டு பில்லியன்களுக்கும் அதிகப்படியான உற்பத்தி மூலப்பொருட்கள் கிடைக்காமல் போகின்றமையால் தொழிற்பேட்டைகளுக்கு உகந்த - தேவையான அத்தியாவசிய மூலப்பொருட்கள் எவ்வித பிரயோசனமுமற்று நாசமடைந்து போகின்றன. இதனால் முறையான விளைச்சலை நாம் திட்டமிட்டு மேற்கொள்வோமானால் இன்று நாம் ஈட்டிக்கொள்ளும் 800 மில்லியன் டொலரின் இரு மடங்கை மேலதிக இலாபமாகப் பெற்றுக்கொள்ளலாம். எப்படி என்றால் தேங்காய் தொழிற்சாலையில் அதிகூடிய கேள்விகளும், பெறுமதியும் உள்ளடக்கியது எது என்று பார்த்தால் அது தேய்காய்ச் சிரட்டைக்காகும். நாங்கள் தேங்காய் தொழிற்சாலைக்கு கூடுதலான சிரட்டைகளைக் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை வகுப்போமானால் எங்களுடைய நோக்கங்கள் நிச்சயமாக வெற்றி பெறும்.

**இதற்காக தேங்காய் அபிவிருத்தி அதிகார சபை எவ்வாறான திட்டங்களைக் கையாண்டுள்ளது?**

பிரதான காரணியாக உற்பத்திச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக இதுவரை காலப்பகுதிக்குள் பல்வேறு வகையான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். நீண்டகால தூர நோக்கத்தை அடிப்படையாகக் கருதி தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் முக்கோண வலயத்தினூடாக புதிய தேங்காய் உற்பத்தியை அறிமுகப்படுத்தியுள்ளோம். அதுவும் தென்னம் உற்பத்தி மற்றும் தொழிற்பேட்டைக்கு உட்பட்ட பிரதேசத்திலும் இவ்வாறான உற்பத்தி முறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆலோசனைகளை நடத்திய வண்ணம் உள்ளோம். இன்றைய நாள் கணக்கின்படி சுமார் 70 மில்லியன் தென்னம் மரங்கள் எம்மிடம் உள்ளன. இம்மரங்களிலிருந்து 10க்கும் 20க்கும் இடைப்பட்ட தேங்காய்களை விளைவிப்பதே எமது தலையாய கடமைகளாகும். இதற்காக தென்னம் மரங்களுக்குத் தேவையான பசளைகள், நீர் வசதி போன்றவற்றை பெற்றுத்தருவதற்கும் நாம் பொறுப்பாக நின்று செயற்படுவோம். அதுபோக, தேங்காய் விளைச்சல் அருகி விளைவதற்கான காரணம் முழு தென்னம் மரங்களுக்கும் ஏற்படுகின்ற ஒரு வகையான நோய்களேயாகும். இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு முறையான ஒரு தேங்காய் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான எல்லா வகையான முன்னேற்பாடுகளையும் செய்வோமாக.

**தென்னம் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்?**

எனக்குத் தெரிந்த மட்டில் தென்னம் தொழிற்சாலைகளுக்கு மிக அருகில் மிகத் திறமைவாய்ந்த உற்பத்தியாளர்களும் உற்பத்தி திறனாய்வாளர்களும் இருக்கின்றனர். அவர்கள் இதுவரை காலப்பகுதிக்குள் தங்களுடைய திறமைகள் அனைத்தையும் இச்சமூகத்தினருக்கு வெளிக்காட்டியுள்ளனர். இவ்வாறானவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துகின்ற போது பல்வேறு வகையான தொழில்நுட்ப சவால்களுக்கு முகம் கொடுப்பதை நான் காணும் விதமோ? உதாரணத்திற்கு நான் ஒன்றை இங்கு குறிப்பிடுகிறேன். நம்முடைய தேங்காய்ப்பால் உற்பத்தியாளர்கள் தங்களுடைய தயாரிப்பானது நேர்த்தியான முறையில் தொழில்நுட்ப பரிசோதனைக்கு உட்பட்டு ஏற்றுமதி செய்கின்றபோது எதிர்கொள்ளும் சவால்கள். இதனால் இவ்வாறான உற்பத்தியாளர்கள் வெளிநாட்டுச் சந்தையில் பின்தங்கிய நிலைமைக்கு கொண்டுசெல்கின்றார்கள். எனவே, நாங்கள் தேங்காய் அபிவிருத்தி அதிகார சபையினர் என்ற வகையில் சீனா போன்ற நாட்டினரிடம் இருந்து தொழில்நுட்ப அறிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு யோசனையை முன்வைக்கிறோம். அதேபோன்று டிஜிட்டல் மயமாக்கல் நுட்பத்தை இலகுவாக அறிமுகப்படுத்தி அதிகப்படியான வருவாய்களை ஈட்டிக்கொள்வதற்கான சிறந்தொரு சுற்றுபுறச் சூழலை உருவாக்குவோம். இதன்படி எங்களுடைய தொழிற்பேட்டைகளை மேலும் முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கும், அதனை போஷணை அடையச் செய்வதற்கும், அதிகூடுதலான வெளிநாட்டு வருவாய்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகும்.

**தென்னம் (தேங்காய்) உற்பத்தி தொடர்பான எங்களுள் இருக்கும் அனுபவங்கள் எவ்வாறானவை?**

உண்மை ஒன்றைக் கூறுவோமானால், வேறு நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தேங்காய் உற்பத்தி தொடர்பான பரந்த அளவிலான அனுபவங்கள் எமக்கு கிடையாது. பாவனையாளர்கள் என்ற வகையில் தேங்காயை பாலுக்காகவும் எண்ணெய்க்காகவுமே மாத்திரம் நாங்கள் பயன் படுத்திக்கொள்வது வழக்கம். சீனா போன்ற நாடுகள் தேங்காயை உபயோகிப்பது ஔடதத்திற்காக (மருத்துவத்திற்காக). விசேஷமாக சிரட்டையில் உள்ள ஒரு வகை இரசாயனப் பதார்த்தம் நம் உடலில் உள்ள விஷத்தை உறிஞ்சும் தன்மை கொண்டது. இதனாலேயே மருத்துவத்திற்கு மட்டுமல்லாது, ஆயர்வேத ஔடதத்திற்கும் தேங்காய் எண்ணெயை உபயோகிக்கின்றனர். அதுமட்டுமன்றி, ஒப்பனை அலங்காரத்திற்கும் தேங்காய் எண்ணெயை பயன் படுத்துகின்றனர். இதனால் தேங்காய் தொழிற்சாலை ஊடாக பெருவாரியான வெளிநாட்டு வருவாய்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிறைய சந்தர்ப்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அதேபோன்று சிறந்தொரு தென்னம் கன்றை அறிமுகப்படுத்துவதற்கான தெங்கு வேளான்மை நிலையம் ஒன்றையும் பரிசோதனை ஆய்வு கூடம் ஒன்றை நிறுவுவதற்கும் முன்னின்று செயற்படுவோம்.



பேராசிரியர் ரொஷான் பெரேரா, தலைவர், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

ஜனக்க பிரேமரத்ன, பணிப்பாளர் நாயகம் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

**எங்களுடைய தயாரிப்பிற்கு சர்வதேச சந்தையில் எவ்வாறான கேள்விகள் உள்ளன?**

இன்றைய காலகட்டத்தில் உலகளவில் கூடுதலான தேங்காய்களை இறக்குமதி செய்யும் நாடாக சீனா காணப்படுகிறது. அதில் இலங்கைத் தேங்காய்களுக்கு அதிக கேள்விகளும் உள்ளன. இதற்கான விஷேட அம்சம் யாதெனில், எங்களுடைய தேங்காயின் கொழுப்பும், தேங்காய் நீரின் ருசியும் பிரதான அம்சங்களாகக் காணப்படுகின்றன. இதனால் சர்வதேச மட்டத்தில் எமது நாட்டின் தேங்காய் (தென்னை) பயிர்ச்செய்கைக்கு பரந்தளவிலான நன்மதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனாலேயே நாங்கள் 'சிலோன் கொகனட்" என்ற நாமத்தை நிலைநாட்டுவதற்குத் தயாராக இருக்கின்றோம். இதனால் நாங்கள் தேங்காய் பற்றிய ஒரு விழிப்புணர்வையும் தேங்காய் தொழிற்பேட்டைகள் மீதும் மிகுந்த அவதானத்தைச் செலுத்தி வருகிறோம்.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை என்ற வகையில் எங்களுடைய தேங்காய் பற்றிய குணவியல்புகளை பாதுகாத்து மற்றும் அதனை மேலும் உயர் தரத்திற்கு கொண்டுசெல்வதற்கும் உலக சந்தையில் எங்களுடைய தயாரிப்பை உலக தரம் வாய்ந்ததொன்றாக மாற்றி அமைப்பதற்கும் முன்னின்று செயற்படுவோம்.

**படப்பிடிப்பு:** கிரிஷான் காரியவசம்


வடக்கிற்கு **கற்பகத்தரு**

வடக்கின் தெங்கு முக்கோணம்




வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் இணைத்து, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி,
வடக்கின் தெங்கு முக்கோணத்தை ஆரம்பித்தல்,
2023ம் ஆண்டு மிகச் சிறந்த தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களின் மதிப்பீடு மற்றும்
உலக தெங்கு தினத்தைக் (World Coconut Day கொண்டாடுதல்

கௌரவ மீன்பிடி அமைச்சர் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கள்,
வடக்கு மாகாண கௌரவ ஆளுனர் திருமதி. பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள்
கௌரவ பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்தே அவர்கள்
உள்ளிட்ட அமைச்சர்கள் மந்திரிமார்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பெருமைமிகு பங்கேற்புடன், கௌரவ கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர்
**மருத்துவர் திரு, ரமேஷ் பத்திரண அவர்களின் தலைமையில்**

செப்டம்பர் **2** மு.ப. 9.30 முதல்

யாழ்ப்பாணம் பளை மாதிரித் தென்னந் தோப்பில் இடம்பெறும்.



உற்பத்திப் பொருளாதாரத்தை பலப்படுத்தும் தெங்குக் கைத்தொழில்

தென்னை மரத்தில் எந்தப் பகுதியும் பயன்படுத்தப்படாமல் அகற்றப்படுவதில்லை. அனைத்தும் பொருளாதார ரீதியாகவும், சமூக மற்றும் கலாசார ரீதியாகவும் பயன்படுத்தப்பட்டு, உணவு தொடர்பான உற்பத்திகள், விவசாய உள்ளீடுகளாக அமையும் உற்பத்திகள், அழகிய கைப்பணிப் பொருட்கள், வேறு வகையிலான பயன்பாட்டுப் பொருள் உற்பத்திகளைப் போன்றே பெரும்பாலான நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்குத் தேவையான ஒரு மூலப் பொருளாகவும் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தைப் போன்றே, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாகவும் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தையும் பலப்படுத்துகின்றன.

தெங்கு கைத்தொழிலிலுள்ள சவால்களை வெல்லுதல்

- ☐ இலங்கையின் நிலப்பரப்பில் சுமார் 28% அளவில் தெங்கு பயிர்ச்செய்கை பரவியுள்ளதுடன், 2022ம் ஆண்டு 3.2 மில்லியன் தேங்காய் சாகுபடியாகக் கிடைத்துள்ளது.
- ☐ தெங்கு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்குமே இந்நாட்டு நுகர்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுவதுடன் எஞ்சிய தொகை தெங்கு கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.
- ☐ தெங்கு உற்பத்தியும், தென்னை மரத்தின் ஏனைய பகுதிகளைக் கொண்டு உற்பத்தியாகின்ற பல்வேறு பொருட்களையும் சேர்த்து தெங்கு தொடர்பான உற்பத்திக் கைத்தொழிலின் மூலம் கடந்த ஆண்டில் 817 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டது.
- ☐ அவ்வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களுக்கு உலக சந்தையில் உருவாகியுள்ள புதிய சாதகமான சாத்தியங்கள் மற்றும் கேள்வியின் அடிப்படையில் நில முகாமைத்துவம், நீர் முகாமைத்துவம், மண் போசாக்கு நிலைமையை அதிகரித்தல், உயர் விளைச்சலுடன் கூடிய கலப்பின தெங்கு இனங்களை பிரபலப்படுத்துவதன் ஊடாக பயிர்ச்செய்கை மேம்பாட்டையும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழில் மேம்பாட்டையும் நாம் மேற்கொள்ள நேரிடும்.

தெங்கு மேம்பாட்டுக்கு பெருந்தோட்டத்துறைக் கைத்தொழில் அமைச்சின் பங்களிப்பு

- ☐ 2022ம் ஆண்டில் 5.5 மில்லியன் தென்னங் கன்றுகளை உருவாக்கி பகிர்ந்தளித்தல்
- ☐ ப்ரொன்டிஸ்பா ஒழிப்பு, வெண் ஈ கட்டுப்பாடு போன்ற விளைச்சலுக்கு சேதம் விளைவிக்கும் கிருமிகளின் தொல்லையை ஒழித்தல் மற்றும் கட்டுப்படுத்தலைப் போன்றே, பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- ☐ கலப்பின விதை தென்னங் கன்றுகளின் உருவாக்கத்தை அதிகரித்தல், "வீட்டுத் தோட்டத்திலிருந்து வீட்டுக்குத் தேங்காய்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்
- ☐ முறையான பயிர்ச்செய்கையின் கீழ், தென்னங் கன்றுகளை நடும் கருத்திட்டத்தை செயற்படுத்தல், தென்னங் கன்றுகளை நடுவதற்கான தென்னங் கன்றுகளை வழங்கும் கருத்திட்டத்தை செயற்படுத்தல்.
- ☐ தென்னை மரங்களைப் பாதுகாப்பதற்காக மரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தென்னை மரமும் தடைசெய்யப்பட்ட மரங்களில் உள்ளடக்கப்பட்டது.
- ☐ சவூதி அரேபியாவின் Green Initiative 2021 கருத்திட்டங்களுடன் ஒன்று சேருதல் போன்ற தெங்கு கைத்தொழில் சார்ந்த வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகளை விரிவாக்கிக் கொள்ளுதல்
- ☐ தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்கான ர்ளு ஊழனந 38க்கு மேலதிகமாக புதிதாக 12ஐப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- ☐ தென்னந்தும்பு மற்றும் தேங்காய்ச் சிரட்டைகளை சேகரிக்கும் முன்னோடிக் கருத்திட்டத்தை செயற்படுத்தல். தும்பு மற்றும் தென்னம் நார்களை உலர்த்துவதற்கான வசதிகளை வழங்கும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல். மரபுரீதியான தேங்காயெண்ணைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்கும் கருத்திட்டத்தை செயற்படுத்தல்
- ☐ தெங்கு சார்ந்த உற்பத்திகளில் பெறுமதி சேர்ப்பதற்கான விதிமுறைகளை செயற்படுத்தல்.
- ☐ இற்றைப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தை தெங்கு பயிர் செய்கையிலும் தேங்காய் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலிலும் பயன்படுத்துதல்

எதிர்கால நோக்கங்களும் இலக்குகளும்

- ☐ இப்போதுள்ள தெங்கு பயிர்களைப் பாதுகாத்து, அவற்றின் விளைதிறனை அதிகரித்து வீட்டுத் தோட்ட தெங்குப் பயிர் செய்கைகளை மேம்படுத்துவதைப் போன்றே புதிய பயிர் செய்கைகளை ஆரம்பித்தல்
- ☐ தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழிலை பலப்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அதிகரித்து, இற்றைப்படுத்தப்படும் உலக சந்தை தரங்களுக்கு ஏற்றவாறு தெங்கு சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்
- ☐ வடக்கின் தெங்கு முக்கோணத்தின் வாயிலாக 3 மில்லியன் தென்னங் கன்றுகளைப் புதிதாகப் பயிரிடல்
- ☐ தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களை வடக்கு மாகாணத்தில் புதிதாக ஆரம்பித்தலும் 10 வருடங்களில் தெங்கு சார்ந்த ஏற்றுமதி வருமானத்தை 2 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிப்பதும்.

தெங்கு கைத்தொழில் மேம்பாட்டுக்கான அமுலாக்கல் நிறுவனங்கள்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை | தெங்கு பயிர்ச்செய்கை சபை | தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

விளம்பர அனுசரணை - தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

# மதத் தலைவர்கள் அரசியலில் தலையிடுவதை விரும்பவில்லை

## ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் தெரிவிப்பு

மதத் தலைவர்கள் அரசியலில் தலையிடுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் மக்களுக்கு உபதேசம் செய்து அறிவுரைகளை வழங்கி நல்வழிபடுத்துவதே சிறந்ததாகும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜிந்துபிட்டி நீதிராஜா மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது எனது முழுமையான நிதி ஒதுக்கீடுகள் கல்வித்துறைக்காக ஒதுக்கப்பட்டது.

இங்குள்ளவர்களுக்கு அந்த விடயம் தெரியாது. பெற்றோர் தம் பிள்ளைகள் எங்கே கல்வி கற்கிறார்கள் என்று தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். மத்திய கொழும்பில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு நான் பதவியிலிருந்த போது பல வேலைத்திட்டங்களை செய்துள்ளேன். அதனை பெற்றோர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

2015ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிகளவானோர் பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருக்கிறார்கள். அதற்கு காரணம், நாங்கள் அந்த காலகட்டங்களில் செய்த அபிவிருத்தித் திட்டங்களாகும்.

நீங்கள் வாக்களித்த உங்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு சேவையாற்றுவதை விட



தம்மை பிரபல்யப்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர்.

இன்று தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளில் ஆளணி, பௌதீக வளப்பற்றாக்குறை நிலவுகின்றன. எனது பதவிக்காலத்தில் ஆயிரத்து 900 ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பியுள்ளேன். அதில் தமிழ், முஸ்லிம் இரு தரப்பினருக்கும் நியமனங்களை வழங்கியுள்ளேன். கல்வித்துறை மேம்பாட்டுக்காக இவ்வாறு பாரிய பணிகளை செய்துள்ளேன். இதனால் அன்று என்னுடன் மாகாண சபையிலே இருந்த பெண் உறுப்பினர் ஒருவர், பிரபா நீங்கள் ஏன் பாடசாலைகளுக்கு இவ்வளவு அபிவிருத்திகளை செய்கிறீர்கள். அதற்கு பதிலாக தோட்டங்களுக்கு கழிவறைகளை கட்டிக் கொடுக்கலாமே என்று கூறினார். அப்போது நான் கூறினேன், எனது பிள்ளைகளுக்கு தரமான கல்வியை கொடுக்க வேண்டும். நான் வாக்குகளுக்காக இதை செய்யவில்லை. அவர்களுக்கு கல்வியை கொடுத்து விட்டால் நாளை அவர்களுக்கான தேவையை அவர்களே நிவர்த்தி செய்து கொள்வார்கள். அதன் பிறகு அவர்களுக்கு அமைச்சர்கள் எவரும் தேவையில்லை என்று நான் கூறினேன்.

எங்கள் கட்சியை பொறுத்தவரையில் இன மத வேறுபாடின்றி செயல்படும் கட்சியாகும். இளம் தலைமுறையினர் அரசியலுக்கு வரவேண்டும் என்பதே எமது கட்சியின் விருப்பமாகும்.

மதத் தலைவர்கள் அரசியலுக்குள் தலையிடுவதை நான் விரும்பவில்லை. மாறாக மக்களுக்கு உபதேசம் செய்து அறிவுரைகளை வழங்கி மக்களை நல்வழிப்படுத்துவதே சிறந்ததாகும். நாங்கள் எவருடனும் கூட்டணி வைத்து கொள்ள விரும்புவதில்லை. தனித்து நின்று மக்களுக்கு சேவை செய்யவே விரும்புகின்றோம். இப்போது இருக்கும் கட்சி தலைவர்கள் எவரும் அரசியலை அரசியலாக பார்ப்பதில்லை. ஒவ்வொரு தரப்பினருக்கும் ஒவ்வொரு முகத்தை காண்பிக்கின்றனர். எனவே மக்கள் கட்சிகளின் பின்னால் ஓடாமல் தெளிவான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

போரின்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுப்பதற்காக நாமும் போராடுகிறோம். வலிந்து காணாமலாக்கப் பட்டோருக்கான நீதியை வழங்குமாறு ஜனாதிபதியை வேண்டுகின்றோம். அதற்கான தீர்வை அவர் வழங்குவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

# பேருவளை - மருதானை பஸ் சேவை ஆரம்பம்





*பேருவளை நிருபர்*

அளுத்கமையிலிருந்து பேருவளை - மருதானை வீதியூடான புதிய பஸ் சேவையொன்று அளுத்கமை இ.போ.ச. பஸ் டிபோவினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேருவளை அல்-பாசியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேருவளை அமைப்பாளருமான பிரசன்ன சஞ்சீவ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பஸ்சேவையை ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி பாசாலை மாணவிகளின் தேவை கருதி பாடசாலை அதிபர் மஸ்னவியா ரிப்கான்,



பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கம் மற்றும் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, குறித்த பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்குறணையில் குத்துச்சண்டைப் போட்டி

*கண்டி நிருபர்*

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படவுள்ள டி.பி.ஜாயா ஞாபகார்த்த குத்துச்சண்டைப் போட்டி கண்டி, அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி நாளை (02) முதல் 06 ஆம் திகதி வரை நடைபெறும். இது தொடர்பான ஊடக சந்திப்பொன்று அஸ்ஹர் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எப்.எம்.சிராஜ் தலைமையில் நேற்று (31)இடம்பெற்றது.

இதன்போது அதிபர் தெரிவித்ததாவது, இப்போட்டியானது கடந்த 52 வருட வரலாற்றில் முதன் முறையாக ஒரு முஸ்லிம் பாடசாலை ஒழுங்கு செய்திருப்பது முக்கிய அம்சமாகும். அகில இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சமாசத்தின் அனுசரணையுடன் இப்போட்டி இடம்பெறுகிறது. இப்போட்டியில் 296 பேர் பங்கேற்கின்றனர். சகல ஏற்பாடுகளையும் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய இலங்கைப் பாடசாலைகள் குத்துச் சண்டை சங்கத்தின் உபதலைவரும் கண்டி மாவட்ட செயலாளருமான எஸ்.சீ.பண்டார தெரிவித்ததாவது,

24 பிரிவுகளாக இப்போட்டி இடம்பெறுகிறது. அதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இப்போட்டியானது தேசிய மட்டப் போட்டியாகும். இதன்போது எல்.பி.ஜயவீர சவால் கேடயப் போட்டியும் டி.பி. ஜாயா கிண்ணப் போட்டியுமே இடம் பெறும் என்றார்.

கண்டி மாவட்ட கல்வித் திணைக்கள விளையாட்டுத் துறைக்கான பணிப்பாளர் அத்துல ஜயவர்தன, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எம். வசீர் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.பாஸில் ஆகியோரும் இதன்போது கருத்து வெளியிட்டனர்.

# தாய்-சேய் நலன் மேம்பாட்டில் சிறந்த நிலையில் இலங்கை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

*சாவகச்சேரி நிருபர்*

தாய்-சேய் நலன் மேம்பாட்டில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் உள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கவிஞரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான ஜென்சன் றொனால்டின் நூல் வெளியீடு கடந்த புதன்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தாய் மற்றும் சிசுவுடைய ஆரோக்கியத்தில் தான் ஓர் நாட்டினுடைய ஆரோக்கியம் தங்கியுள்ளது. அந்தவகையில் தாய்-சேய் மரண விகிதத்தை வைத்தே ஒரு நாட்டினுடைய ஆரோக்கிய நிலையை கணிக்க முடியும். எமது நாட்டில் தாய்-சேய் மரண விகிதம் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக குறைவடைந்துள்ளது. தாய்-சேய் நலனில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுகிறது. எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு பொறிமுறையே இதற்குக் காரணமாகும்.



எமது நாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் என சிறந்த நோய்த் தடுப்புக் கட்டமைப்பு காணப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பை வைத்து நாட்டில் பல தொற்று நோய்களை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

ஒரு காலத்தில் மலேரியா உயிர்கொல்லி தொற்று நோயாக இருந்தது. அது தற்போது கட்டுக்குள் உள்ளது. அத்துடன் செங்கமாரி, டெங்கு போன்ற பல தொற்றுநோய்கள் முழுக் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன.

கடந்த வருடங்களில் உலகளாவிய ரீதியாக பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் தொற்றை எமது சுகாதாரத்துறையால் கட்டுப்படுத்த முடிந்தது. உயிரிழப்புகளைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. எமது நாட்டில் உள்ள சிறந்த சுகாதாரக் கட்டமைப்பு வல்லரசு நாடுகளில் கூட இல்லை. அதனால் தான் அங்கு கொவிட்டால் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. அந்த நாடுகளில் நோய்த் தடுப்பு கட்டமைப்பு வளர்ச்சியடையவில்லை.

எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு சுகாதாரக் கட்டமைப்பை ஸ்தாபித்தவர் செல்லப்பா என்ற ஓர் தமிழர். இலங்கையின் முதலாவது சுகாதார வைத்திய அதிகாரியும் அவரே. அவர் களுத்துறையில் முதன் முதலாக இந்த சுகாதார கட்டமைப்பை உருவாக்கினார். காலப்போக்கில் அது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. இந்த சிறந்த கட்டமைப்பு தான் தாய்-சேய் மரண விகிதம் குறைவாக இருக்க பிரதான காரணம் எனவும் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் நுவரெலியாவுக்கு விஜயம்



*நுவரெலியா நிருபர்*

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் நுவரெலியாவுக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

இதன்போது நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரை சந்தித்து மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.



**வட்டவளை மீனாட்சி தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க சிலை வைபவத்தின்போது பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.**

***(கினிகத்தேனை நிருபர்)***

## மோட்டார் சைக்கிள்கள் திருட்டு

# சந்தேகத்தில் ஒருவர் கைது

*அநுராதபுரம் நிருபர்*

நொச்சியாகம பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்கள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

நொச்சியாகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய நேற்றுமுன்தினம் (30) மாலை நொச்சியாகம, சமஹிபுர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 24 வயதுடைய சமஹிபுர பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்.

சந்தேகநபரிடம் பொலிஸார் நடத்திய விசாரணைகளையடுத்து, அடகு வைக்கும் மத்திய நிலையமொன்றில் அடகுவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் இலக்கத்தகடுகள் பலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## விலைபோகா...

*4ஆம் பக்கத் தொடர்ச்சி...*

பாலா தம்பு அம்பலாங்கொடையைச் சேர்ந்த நான்சி கொத்தலாவல என்ற பாலர் பாடசாலை ஆசிரியை ஒருவரை 1950இல் திருமணம் செய்தார். அவருடன் 1957இல் மணமுறிவு ஏற்பட்ட பின்னர் தொழிற்சங்கத்தில் பணியாற்றிய மே விக்ரமசூரிய என்பவரை 1966இல் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றனர். இருவரும் அமெரிக்காவில் வசிக்கின்றார்கள்.

**தொழிற்சங்கத்துறையில்**

ரோயல் கல்லூரியில் படிக்கும்போதே இடதுசாரிக் கொள்கையில் இவர் ஈர்க்கப்பட்டார். ரோயல் கல்லூரியில் விவியன் குணவர்தனவின் சகோதரர் டனிஸ்டர் குணதிலக்கவுடன் நட்புக் கொண்டதனால், அவர் மூலமாக சூரிய மல் இயக்கத்தில் 1935ஆம் ஆண்டில் இணைந்தார். இக்காலகட்டத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்திய இடதுசாரித் தலைவர்கள் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்தன ஆகியோருடன் இணைந்தார். 1941இல் லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்தார். 1947ஆம் ஆண்டு அரச ஊழியர் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக இவர் பல்கலைக்கழக பணியிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் இணைந்து 1948 பெப்ரவரியில் அதன் செயலாளரானார்.

1928ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக ஊழியர் சங்கம், பாலா தம்பு செயலாளராக ஆன பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியின் செல்வாக்குக்குள் வந்தது. இக்கட்சி நான்காம் அனைத்துலக அமைப்பின் உறுப்பினராக இருந்தது. 1963ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தில் வேலைநிறுத்தம் ஒன்றை தலைமை தாங்கி நடத்தினார். இது பின்னர் நாடு தழுவிய பொது வேலைநிறுத்தமாக உருவெடுத்தது.

1964ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சி நான்காம் அனைத்துலகத்திலிருந்து விலகி அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசில் இணைந்ததை அடுத்து, பாலா தம்பு, எட்மண்ட் சமரக்கொடி போன்றோருடன் சேர்ந்து கட்சியிலிருந்து விலகி இலங்கை புரட்சிகர சமசமாஜக் கட்சியின் தலைவரானார். 1960 மார்ச், 1960 ஜூலை, 1965ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இலங்கை பாராளுமன்றத் தேர்தல்களில் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார்.

பாலா தம்பு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளராக இறக்கும்வரை தொடர்ந்து பணியாற்றி வந்ததோடு, உழைக்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு அவ்வப்போது நிர்வாகங்களுடனும் அரசுடனும் பேச்சுகளில் ஈடுபட்டு தீர்வு கண்டு வந்திருக்கிறார்.

2014 செப்டெம்பர் முதலாம் திகதி தனது 92ஆவது வயதில் அவர் கொழும்பில் காலமானார். இன்று அவரது எட்டாவது ஆண்டு நினைவுதினமாகும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (31.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.8721 | 214.0315 |
| கனேடியன் டொலர் | 231.1421 | 243.0310 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.4937 | 45.4451 |
| யூரோ | 342.6382 | 358.9868 |
| ஜப்பான் யென் | 2.1527 | 2.5227 |
| சிங்கப்பூர் டொலர் | 232.0936 | 243.6192 |
| ஸ்ரேலிங் பவுன் | 399.8580 | 417.4850 |
| சுவிஸ் பிராங்க் | 356.0016 | 375.1796 |
| ஐ.அ. டொலர் | 315.3357 | 326.9396 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 855.8711 |
| குவைட் | குவைட் தினார் | 1047.6425 |
| ஓமான் | ஓமான் றியால் | 838.1194 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.5186 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.0138 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.8450 |

# நாதனோடையில் இடம்பெறும் மணல் அகழ்வை நிறுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டம்





அப்துல்சலாம் யாசீம், மூதூர் செய்தியாளர்

திருகோணமலை, வெருகல் - நாதனோடை பகுதியில் முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி நாதனோடை வீதியில் வியாழக்கிழமை(31) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் "விவசாயத்தை அழித்து எம்மை நிர்க்கதியாக்காதே, மணல் அகழ்வை நிறுத்து: எங்களை நிர்க்கதியாக்காதே, சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்து, எங்கள் வளத்தை சுரண்டாதே" போன்ற சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாதனோடை பகுதியில் 1000 கியூப் மணல் அகழ்வதற்கான அனுமதி தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், அவ்விடத்தில் மணல் அகழப்பட்டால் அது வெருகல் ஆற்றின் அணைக்கட்டை உடைக்கும் அபாயம் இருப்பதாகவும் இதனால் மக்களுடைய உடைமைகள், வாழ்வாதாரம் என்பன பாதிக்கும் என்பதாலுமே அப்பகுதி மக்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மண் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அன்றைய தினம் மண் அகழ்வு தற்காலிகமாக கைவிடப்பட்டதோடு 28ஆம் திகதி இரவு 9.00 மணியளவில் மக்களை அச்சுறுத்தும் முகமாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வட்டவான் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் வட்டவான் மரணசங்கத் தலைவர் ஆகியோர் ஈச்சிலம்பற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மறுநாளான 29ஆம் திகதி மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், மேலும் சிலரை பொலிஸார் தேடி வருவதாகவும் இவ்வாறான நிலையில் மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றவர்களை மறைமுகமாக அச்சுறுத்தி பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி பொலிஸார் கைது செய்வதாகவும், பக்கச்சார்பாக நடந்து கொள்வதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது கருத்து தெரிவித்த மக்கள், நாதனோடையில் மணல் அகழ்வு செய்ய விடமாட்டோம். இங்கு அணைக்கட்டு மேற்கொள்ளப்பட்டால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தமது கிராமங்கள் பாதிக்கப்படும். இதற்கு முதலும் பல தடவைகள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தே வருகின்றோம். இனியும் வெள்ளப்பெருக்கு ஏற்பட இடமளிக்கமாட்டோம். அதற்காக நாதனோடையில் மணல் அகழ்வு செய்ய விடமாட்டோம் என்றார்.

# வீட்டுத்தோட்ட உபகரணம் உலருணவுப் பொதி வழங்கல்




மாளிகைக்காடு செய்தியாளர்

சமூக அபிவிருத்தி நிறுவனம் காரைதீவு ஸ்பீட் நிறுவனத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் 10 கிராமங்களை உள்ளடக்கியதாக சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

குறித்த கிராம ஒத்துழைப்பு மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்கப்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கான உபகரணங்களும் உலருணவுப் பொதியும் வழங்கும் நிகழ்வு காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் சமூக அபிவிருத்தி நிறுவன பிராந்திய இணைப்பாளர் எம்.எஸ்.ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரம, கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் மற்றும் சிறப்பதிதியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், பங்காளர் நிறுவனமான ஸ்பீட் நிறுவன செயலாளர் வீ. ஜனார்த்தனன், உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான வலையமைப்பு (TRF) மற்றும் இத்திட்டத்துக்கான ஸ்பீட் நிறுவன இணைப்பாளர் எம்.ஐ.றியால், அதன் அங்கத்தவர்களும் கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் காரைதீவு, கல்முனை வடக்கு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 75 கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போராடிக்கொண்டிருக்கும் தாய்மார்களுக்கு நாட்டில் என்றுமே நீதியை பெறமுடியாது

## சந்தியா எக்னெலிகொட மட்டக்களப்பில் தெரிவிப்பு

கனகராசா சரவணன்

எமது நாட்டில் காணாமல் போனவர்கள் என்று ஒன்று இல்லை எனவும் அவர்கள் வெளிநாடுகளில் இருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். எனவே, நீங்கள் ஜனாதிபதி தானே, வெளிநாட்டில் இருந்து அவர்களை இலங்கைக்கு கொண்டுவரமுடியும் தானே. எனவே, இவ்வாறான ஜோக்கை நிறுத்துங்கள். போராடிக்கொண்டிருக்கும் இந்த தாய்மார்களுக்கு இந்த நாட்டில் என்றுமே நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே, சட்டத்தின் கீழ் அவர்களை இலங்கைக்கு வர அனுமதிக்க வேண்டும் என திருமதி சந்தியா பிரதீப் எக்னெலிகொட தெரிவித்தார்.

மட்டக்களப்பில் புதன்கிழமை (30) சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தையிட்டு இடம்பெற்ற "சர்வதேசமே எமக்கு நீதிவேண்டும்" எனக் கோரிய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். 2022ஆம் ஆண்டு ஐ.நாவில் இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த விசாரணைக்குழு இறுதிவரை இலங்கைக்கு வரவில்லை. அவர்களுக்கான விசாவுக்கான அனுமதியை வர்த்தமானி மூலம் தடைசெய்து அதனை ஜனாதிபதியின் வீட்டு காப்பற்றின் கீழ் போடப்பட்டுள்ளது.

இன்று வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போனவர்களது சர்வதேச தினம். இலங்கையை போன்று உலகில் நீதிக்காகப் போராடியவர்களை தன்னிச்சையாக அரச தலைவர்களினது அதிகாரங்களுக்கு பலியாக்கப்பட்ட தமது அன்பார்ந்த உறவுகளைத் தேடும் பாதிக்கப்பட்ட உறவுகள், வடக்கு, கிழக்கில் பலாத்காரமாக காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீரில் மூச்சுவிட்ட பூமி இதுவாகும்.

எப்போதும் நான் இந்தப் பூமியை நேசிக்கின்றேன். இந்த இடத்துக்கு ஒவ்வொருநாளும் வருவேன். ஏனென்றால், ஜனவரி 24ஆம் திகதி கொழும்பு கொஸ்வத்தை பிரதேசத்தில் எனது கணவரான ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டு கடைசியாக அக்கரைப்பற்று இராணுவமுகாமுக்கு கொண்டுவரப்பட்டுள்ளார். அவர் அங்கு எரிக்கப்பட்டாரா அல்லது எங்காவது புதைக்கப்பட்டாரா அல்லது கடலில் கொண்டுசென்று போட்டார்களா? தெரியவில்லை.

இருந்தபோதிலும், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் பல காரணங்கள் தெரிவிக்க வேண்டியுள்ளது. காணாமல்போனோருக்கான அலுவலக காரியாலயம் கடந்த 05 வருடங்களுக்கும் மேலாக அதிகளவான பணத்தை வீண் செலவு செய்து நடத்தி வருகின்றது. இந்த அலுவலகம் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை உண்மையாக நீதியாகத் தேடிக் கொடுத்துள்ளதா, குறைந்தது உண்மையையாவது அமைப்புகளுக்கு முன்வைத்ததா, இல்லை. இந்தத் தாய்மாருக்கு தேவையானது உண்மையும் நீதியும். அது இந்த நாட்டில் நடைபெறாது என்பதால் தான் சர்வதேச அமைப்புகளிடம் சொல்லவேண்டியுள்ளது. இதனால் போராட்டங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏனென்றால், இந்த தாய்மார்களுக்கு இந்த நாட்டில் என்றுமே நீதியை பெற்றுக் கொள்ள முடியாது - என்றார்.

# மீனவர் சமாச அலுவலகம் விஷமிகளால் சேதம்

சாய்ந்தமருது செய்தியாளர்




அம்பாறை, காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாளிகைக்காடு கடற்கரை வீதியில் அமைந்துள்ள மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ அலுவலகம் இனந்தெரியாத விஷமிகளினால் தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் புதன்கிழமை (30) இரவு வேளையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அலுவலக கதவுகள், ஜன்னல்கள் முற்றாக சேதமடைந்திருப்பதுடன் கதிரைகள், மேசைகள் உள்ளிட்ட தளபாடங்களும் உடைந்து சேதமடைந்துள்ளன.

அத்துடன், அலுமாரிகளில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சமாசத்துக்கான ஆவணங்களும் வெளியில் தூக்கி வீசப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் அமையப்பெற்றுள்ள குறித்த சமாச அலுவலகம் அண்மைக் காலமாக எவ்வித செயற்பாடுமின்றி பூட்டிய நிலையில் காணப்படுவதாகவும் இக்கட்டிடத் தொகுதியில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதேவேளை, இப்பிரதேசத்தில் இயங்கி வருகின்ற சில பொது அமைப்புகள் தமது செயற்பாடுகளுக்கு இக்கட்டிடத்தை ஒதுக்கித் தருமாறு கோரிக்கைகளை விடுத்திருந்தன. எனினும், சமாச நிர்வாகத்தினர் இக்கட்டிடத்தை ஒப்படைக்க முன்வரவில்லை எனக் கூறப்படுகிறது. இந்நிலையில், பொதுத் தேவைகளுக்கு பயன்படக்கூடிய இக்கட்டிடம் சேதப்படுத்தப்பட்டிருப்பது குறித்து இப்பகுதி மீனவர்களும் பொது அமைப்பினரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

# அஸ்வெசும தொடர்பில் அம்பாறையில் செயலமர்வு




இஸ்மாயில்புரம் செய்தியாளர்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் எதிர்காலத் திட்டங்கள், அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழுத் தலைவர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு புதன்கிழமை(30) அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி பாக்கியராஜா, குறுநிதிப் பணிப்பாளர் விக்கிரமசிங்க, மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சங்க முகாமைத்துவப் பணிப்பாளர்கள், வலய உதவியாளர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழுத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பள்ளிவாசல்களில் மயோனுக்கு துஆப் பிரார்த்தனை

பொலிவேரியன் செய்தியாளர்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உயர்கல்விப் பிரதி அமைச்சருமான எம்.எம்.முஸ்தபா (மயோன்) மரணமானதையொட்டி இன்று வெள்ளிக்கிழமை(01) துஆப் பிரார்த்தனை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையை தொடர்ந்து அன்னாரின் ஞாபகார்த்தமாகவும் மறுமை வாழ்வின் ஈடேற்றத்துக்காகவும் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தில் உள்ள அனைத்து ஜும்ஆப் பள்ளிவாசல்களிலும் இன்று ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து இந்த துஆப் பிரார்த்தனை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் துஆப் பிரார்த்தனையில் அனைத்து ஜமாஅத்தினரும் கலந்து கொள்ளுமாறும் சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மர்ஹூம் அஷ்ரபின் 23ஆவது சிரார்த்த தின கலந்துரையாடல்



கோணாவத்தை, மாளிகைக்காடு செய்தியாளர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 23ஆவது சிரார்த்த தின நிகழ்வு செப்டெம்பர் 16ஆம் திகதி சாய்ந்தமருதில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீல.மு.காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் தேசிய நிகழ்வாக நடைபெறவுள்ள இச்சிரார்த்த தின நிகழ்வு சம்பந்தமாக சாய்ந்தமருது பிரதேச கட்சி பிரமுகர்களுக்கு தெளிவுபடுத்தும் ஆரம்பகட்ட கூட்டம் கட்சியின் தவிசாளர் அப்துல் மஜீத் தலைமையில் முன்னாள் கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் இல்லத்தில் நடைபெற்றது.

மறைந்த தலைவரின் ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ள இவ்விசேட நிகழ்வை விமர்சையாக நடத்துவது குறித்தும் ஸ்ரீல.மு.காங்கிரஸ் கட்சி நடவடிக்கைகளை பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் வீரியமாகக் கொண்டுசெல்வது குறித்தும் இக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டன.

இக்கட்சியில் சிறு சிறு காரணங்களுக்காக கட்சியை விட்டு விலகிநிற்பவர்களையும் கூடுதலான இளைஞர்களை இணைத்துக் கொள்வதற்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் ஸ்ரீல.மு.காங்கிரஸ் கட்சி எவ்வாறு கோலோச்சியதோ அவ்வாறு மீண்டும் செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்நிகழ்வு தொடர்பாக நடைபெறவுள்ள கலந்துரையாடலொன்று கலாநிதி சிறாஸ் மீராசாஹீப் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை(01) அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு கட்சியின் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன் சிரார்த்த தின நிகழ்வில் நடைபெறவுள்ள அம்சங்கள் தொடார்பிலும் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்துக்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள், சாய்ந்தமருது மத்தியகுழு, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், பிரதேச கட்சியின் முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர் சிராஸ் மீராசாஹீப் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**தமிழ் மக்களிட பிரச்சன தொடர்பாக அரசாங்கத்துடன் பேசுவதற்கு புளட் கட்சி மத்தியகுழு கூட்டத்தில தீர்மானம் எடுத்திருக்காங்க எலுவா...? இவங்க இப்பதான் சந்திர மண்டலத்தில இருந்து நேரடியாக சாவகச்சேரியில இறங்கி அங்குநடந்த மத்திய குழு கூட்டத்தில தீர்மானிச்சிருக்காங்க போல... அடே இவ்வளவு காலமும் ஒங்கட தலைவர் சித்தாத்தன் எம்பி பாராளுமன்றத்தில நித்திரையா கொண்டவர்? இல்லாட்டி அந்த விளக்கு ஜனநாயக தேசிய கூட்டமைப்பில ஐந்தில் ஒண்டாக ஒங்கட கட்சி அரசாங்கத்தோட பேசக்க சித்தாத்தன் வடய திண்டுத்தா இருந்தவரு? ஆரப்பேய்க்காட்டிறியள்....!**

# வீதியைவிட்டு விலகி கார் விபத்து



ஆலையடிவேம்பு செய்தியாளர்

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணிக்கப்பிள்ளையார் ஆலய அருகாமையில் உள்ள வளைவில் வெகனார் காரொன்று புதன்கிழமை(30) விபத்துக்குள்ளாகியதாக திருக்கோவில் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

உகந்தை பகுதியிலிருந்து அக்கரைப்பற்று பிரதேசத்தை நோக்கிப் பயணித்திருந்த குறித்த காரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வளைவில் வீதியை விட்டு விலகியுள்ளது. இவ்வேளையில், பாதையின் ஓரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மைல் கல்லை உடைத்துக்கொண்டு பாய்ந்து விபத்துக்குள்ளாகியே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான கார் சேதமடைந்துள்ள போதிலும், தெய்வாதீனமாக வாகனத்தைச் செலுத்தியவர் காயங்கள் எதுவுமின்றி மீட்கப்பட்டார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தென்னாபிரிக்க அடுக்குமாடி குடியிருப்பில் தீ: 73 பேர் உடல் கருகி பலி; 52 பேர் படுகாயம்





தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ்பார்க் (Johannesburg) நகரிலுள்ள அடுக்குமாடி கட்டடமொன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 73 பேர் உயிரிழந்துள்ளதுடன், 52இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜொகன்னஸ்பார்க் நகரிலுள்ள ஐந்துமாடி குடியிருப்பொன்றில் நேற்று (31) திடீரென தீ பிடித்த நிலையில், சில நிமிடங்களிலேயே தீ மளமளவென கட்டடம் முழுவதும் பரவியுள்ளது.

குறித்த அடுக்குமாடி குடியிருப்பில் 200இற்கும் மேற்பட்டோர் இருந்த நிலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கட்டடத்தில் இருந்தவர்களால் அங்கிருந்து வெளியேற முடியவில்லை. இந்தத் தீ விபத்தில் இதுவரை 73 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இறந்தவர்களில் குழந்தைகளும் அடங்குவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் 52இற்கும் மேற்பட்டோர் கடும் தீக்காயங்களுடன் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நகரத்தின் மையத்திலிருக்கும் விபத்து நடந்த மார்ஷல்டவுன் பகுதி, பராமரிக்கப்படாத பழைய கட்டடங்கள் நிறைந்துள்ள பகுதி என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த கட்டடங்கள் ஆபிரிக்க நாடுகளிலிருந்து சட்டவிரோதமாக குடியேறிய மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீண்டநேரம் போராட்டத்துக்குப் பின்னர் தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்துள்ளனர். இந்நிலையில் இடிபாடுகளில் சிக்கியவர்கள் மீட்கும் பணியை அந்நாட்டு மீட்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

## புற்றுநோய்க்கான முதல் ஊசி மருந்து கண்டுபிடிப்பு



உலகிலேயே முதன்முறையாக புற்றுநோய் சிகிச்சைக்கான ஊசிமருந்தை பிரித்தானியா உருவாக்கியுள்ளது.

'அடிஸோலிசூமாப்' எனப்படும் இந்த ஊசிமருந்தைச் செலுத்திய ஏழே நிமிடங்களில் இந்த மருந்து வேலை செய்ய ஆரம்பித்துவிடும் என்று இந்த மருந்தைக் கண்டறிந்த பிரித்தானியாவின் தேசிய சுகாதார சேவை எனப்படும் பொதுச் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தோலுக்கு அடியில் செலுத்தக்கூடிய இந்த ஊசிமருந்தால், புற்றுநோய்க்கான சிகிச்சை காலம் மூன்றில் ஒரு பங்காகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஊசிமருந்து மூலம் புற்றுநோயாளிகளுக்கு விரைவாக சிகிச்சையளிக்க முடிவதுடன், தினமும் ஏராளமான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க முடியும் என தேசிய சுகாதார சேவை அமைப்பின் மருத்துவர் அலெக்சாண்டர் மார்ட்டின் தெரிவித்தார்.

தற்போது இந்த ஊசிமருந்துக்கு அங்கீகாரம் கேட்டு விண்ணப்பிக்கப் பட்டுள்ளதாகவும், ஒப்புதல் கிடைத்தவுடன் உடனடியாக மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## நிலவில் ஹைட்ரஜனை தேடும் பிரக்யான்

- செப். 3இல் முடியும் ஆயுட்காலம்
- 'ஸ்லீப்பிங்மூட்'க்குச் செல்லும் – விக்ரமும் பிரக்யானும்




சந்திரயான்-3இன் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் கலன்களின் ஆய்வுக் காலம் நாளைமறுதினத்துடன் (03) நிறைவடையவுள்ளது.

நிலவில் எதிர்வரும் 3ஆம் திகதிக்குப் பின்னர் சூரியஒளி கிடைக்காது இருள் சூழவுள்ளது. இந்த நாட்களில் வெப்பநிலை பூஜ்ஜியத்திற்கு கீழே 135 டிகிரி வரை சென்றுவிடும். இக்காலப்பகுதியில் விக்ரம் லேண்டரும், பிரக்யான் ரோவரும் தொழிற்படாது 'ஸ்லீப்பிங்மூட்'க்கு சென்றுவிடும். ஆய்வுக் காலம் நிறைவடையவுள்ள நிலையில் விக்ரமும், பிரக்யானும் தமது ஆய்வுப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன.

அந்தவகையில் நிலவில் கந்தகம்(சல்பர்) இருப்பதை கண்டுபிடித்துள்ள பிரக்யான் ரோவர் தற்போது ஹைட்ரஜனுக்கான தேடுதலை மேற்கொண்டுவரும் நிலையில், நிலவின் மேற்பரப்பில் பிரக்யான் ரோவர் பாதுகாப்பாகச் சுற்றிவரும் புதிய வீடியோவொன்றை நேற்று (31) இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ கடந்த ஜூலை 14ஆம் திகதி எல்விஎம் மாக்-3 ரொக்கெட் மூலம் அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தை திட்டமிட்டபடி 41 நாட்களின் பின்னர் ஓகஸ்ட் 23ஆம் திகதி மாலை 6.04 மணியளவில் நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

முதலில் லேண்டர் தரையிறங்கிய நிலையில் பின்னர் ரோவரும் தரையிறங்கி நிலவு மேற்பரப்பின் புகைப்படங்களை எடுத்து அனுப்பி வருகிறது.

இந்த புகைப்படங்களின் மூலமாக நிலவின் மேற்பரப்பில் கந்தகம் (சல்பர்) இருப்பதை பிரக்யான் ரோவர் கண்டறிந்துள்ளதாகவும் ஹைட்ரஜனுக்கான தேடல் நடைபெற்று வருவதாகவும் இஸ்ரோ தெரிவித்தது.

தொடர்ந்து, பிரக்யான் ரோவரின் செயல்பாடுகளை இஸ்ரோ வீடியோ மூலமாக வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில், நிலவில் பாதுகாப்பாக ரோவர் சுற்றிவரும் விடியோவை வெளியிட்டுள்ள இஸ்ரோ, பாதுகாப்பான பாதையைத் தேடி ரோவர் சுழற்றப்பட்டபோது லேண்டர் விக்ரம் இதனை படம்பிடித்துள்ளது. ரோவர் சுற்றி வருவதை ஒரு குழந்தையைப் போல் அல்லவா, விக்ரம் லேண்டர் கண்காணித்து வருகிறது என்று பதிவிட்டுள்ளது.

## சூரியனை நோக்கி நாளை புறப்படுகிறது ஆதித்யா எல்-1



சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக இஸ்ரோ விண்வெளி ஆய்வு நிறுவனம் நாளை (02) காலை 11.50 மணியளவில் அனுப்பவுள்ளது.

இந்நிலையில், ஆதித்யா எல்-1 விண்கலத்தின் ஏவுதலுக்கான ஒத்திகை ஸ்ரீஹரிகோட்டாவில் நேற்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

செவ்வாய், நிலவைத் தொடர்ந்து சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதில் இஸ்ரோ தீவிரம் காட்டுகிறது. இதற்காக ஆதித்யா எல்-1 என்ற அதிநவீன விண்கலத்தை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

இதில், சோலார் அல்ட்ராவைலட் இமேஜிங் டெலஸ்கோப், பிளாஸ்மா அனலைசர், எக்ஸ்ரே ஸ்பெக்ஸ்ட்ரோ மீற்றர் உள்ளிட்ட சாதனங்கள் இடம்பெற்றுள்ளன.

சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்தியா அனுப்பும் முதல் விண்கலமான ஆதித்யா எல்-1, 1,475 கிலோ எடை கொண்டது. பூமியிலிருந்து சுமார் 15 இலட்சம் கி.மீ. தொலைவிலுள்ள 'லொக்ராஞ்சியன் பொயின்ட் ஒன்' என்ற பகுதியில் விண்கலம் நிலைநிறுத்தப்படவுள்ளது.

இங்குதான் சூரியனுக்கும், பூமிக்கும் இடையேயான ஈர்ப்புவிசை சரிசமமாக இருக்கும். எனவே, அங்கிருந்தபடி சூரியனின் வெளிப்புறப் பகுதி வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப்புலம் உள்ளிட்டவை குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில், ஆதித்யா விண்கலம், பிஎஸ்எல்வி சி-57 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள ஏவுதளத்திலிருந்து நாளை (02) காலை 11.50 மணிக்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது. இதற்கான இறுதிக்கட்டப் பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

சூரியன் குறித்த ஆராய்ச்சிக்கு இதுவரை அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு ஆகியவை மட்டுமே விண்கலங்களை அனுப்பியுள்ளன. இந்த திட்டம் வெற்றிபெற்றால், அந்த வரிசையில் இந்திய 4ஆவது இடத்தைப் பெறும்.





கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காட்டு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஐயப்பன் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா புதன்கிழமை(30) இடம்பெற்றது. இதன்போது முறையில் கும்பங்கள் யானை மீது வைத்து வெளிவீதி உலா கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

படம்: கனகராசா சரவணன்



சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் மஹோற்சவ பிரணவ தீர்த்தோற்சவம் புதன்கிழமை (30) நடைபெற்றது. தீர்த்தத்துக்கான சுன்னம் இடித்தல் பூசை நிகழ்வு ஆலய சிவாச்சாரியார்களின் தலைமையில் வேத பாராயணம் ஓதப்பட்டு அரோகரா கோஷத்துடன் சுவாமி பிரணவ தீர்த்தோற்சவத்துக்கு சித்தாண்டி உதயன்மூலையில் அமைந்துள்ள சரவணப் பொய்கை தீர்த்தக்குளத்துக்கு எழுந்தருளினார். இதன்போது பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

படங்கள்: மட்டக்களப்பு செய்தியாளர்



அம்பாறை, நிந்தவூர் - அட்டப்பள்ளம் பிரதேச பிரதான வீதியில் புதன்கிழமை (30) மாலை காட்டு யானைகள் சில வீதிக்கு இறங்கியதில் வீதியில் சென்றோர் மிகுந்த அச்சத்துக்குள்ளாகிய அதேவேளை, பிரதேச மக்களும் அச்சம் தெரிவித்தனர். இந்நிலையில், அன்றையதினம் சைக்கிளில் சென்ற நபரை நோக்கி யானை பின்தொடர்ந்து சென்றதில் தெய்வாதீனமாக குறித்த நபர் தப்பியுள்ளார். மேலும் அசம்பாவிதங்கள் நடக்காமலிருக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

படம்: கோணாவத்தை செய்தியாளர்

## மாவடிமுன்மாரிப் பாடசாலைக்கு மாடிக்கட்டிடம் அமைக்க ஏற்பாடு

கல்லடி செய்தியாளர்



கடந்த 2022இல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜப்பான் மற்றும் இலங்கை சோஷலிசக் குடியரசின் நட்புறவினதும் கூட்டுறவினதும் அடையாளமாக ஜப்பானிய மக்களின் நிதியொதுக்கீட்டில் அமைக்கப் படவுள்ள மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை(30) நடைபெற்றது.

மட்/மமே/மாவடிமுன்மாரி அ.த.க.பாடசாலைக்கு வழங்கப்படவுள்ள மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன், நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், வீதி சிறுவர்கள் அமைப்பின் செயற்றிட்டப் பணிப்பாளர் அக்ஷலா மீனா விவேகானந்தன், முன்னாள் அதிபர் பி.தங்கவேல், பாடசாலை அதிபர் பே.சூரியகுமார், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## தமிழர்களின் கனகர் கிராம காணிகளை முஸ்லிம்களுக்கு வழங்க பிரயத்தனம்

### ஈரோஸ் செயலாளர் பிரபா

புளியந்தீவு செய்தியாளர்




பொத்துவில், கனகர் கிராமத்தில் 200 தமிழ்க் குடும்பங்கள் 40 வருடங்களாக பயிர் செய்து வந்த காணிகளை முஸ்லிம்களுக்கு வழங்க பொத்துவில் எம்.பி. முஷாரப்பும் பிரதேச செயலாளர் பிர்னாஸும் பிரயத்தனம் எடுத்துவருகிறார்களென ஈரோஸ் கட்சியின் செயலாளர் நாயகம் பிரபா தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், தமிழர்களுக்கான அரசியல் முன்னோடிகளும் சமூக முன்னோடிகளும் இந்த தமிழ்ப் பிரதேசங்களில் தோன்றவில்லை. இதனால் தமிழ் மக்களின் தேவைகளை அரசுக்கு எடுத்துக்கூற யாரும் இல்லாத நிலை இருந்து வந்தது. இப்போது ஈரோஸ் அதை கையிலெடுத்துள்ளது.

கனகர் கிராமம் மறைந்த கனகரெத்தினம் எம்.பியின் காலத்தில் தோன்றியது. 90ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு இடம்பெயர்ந்த இக் கிராமத்தவர்கள் மீள் குடியமர்த்தப்படவில்லை. இது பிரதேச செயலாளரின் பிழை. அவ்வாறு நடந்திருந்தால் அம் மக்கள் பல நன்மைகளையும் அரச காணிகளுக்கான உறுதிகளையும் பெற்றிருப்பார்கள். வேண்டுமென்றே அது தவிர்க்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சூழ்ச்சி.

மக்களால் பயிர்செய்யப்படும் காணிகளுக்கு பொத்துவில் பிரதேச செயலாளர் பிருநாஸ் உச்ச எல்லை விதித்துள்ளார். ஒவ்வொரு குடிமகனும் 2 ஏக்கருக்கு மேற்பட்ட காணிக்கு சொந்தம் கொண்டாட முடியாதென அறிவுறுத்தியுள்ளார். இந்த எல்லைக்கு மேற்பட்ட மிகுதியான காணிகளை முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டுமென மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பொத்துவில் எம்.பி. முஷாரப் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பொத்துவில் எம்.பியும் பிரதேச செயலாளரும் முஸ்லிம்களுக்கு காணி வழங்குவதற்காக தமிழ்மக்கள் சொந்தம் கொண்டாடிய காணிகளை பறிப்பதற்கு நாடகமாடுவது நியாயமாகாதென அவர் வலியுறுத்தினார்.

இதுகுறித்து முஷாரப் எம்.பியிடம் வினவியபோது, தமிழ் மக்களது காணிகளை பறிப்பது எனது நோக்கமல்ல, அவர்களது தேவைக்கு அப்பாற்பட்ட காணிகள் இருந்தால் அவைகளை முஸ்லிம்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன். இதில் யாருக்கும் எவ்வித நஷ்டமுமில்லை, அதில் தப்பும் இல்லை - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் - சமூக ஆர்வலர்கள் கலந்துரையாடல்

மட்டக்களப்பு செய்தியாளர்



மட்டக்களப்புக்கு வருகைதந்த இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல்ஸ்டீபன்ஸ் மற்றும் அவரது குழுவினர் சிவில் சமூக ஆர்வலர்களை சந்தித்து சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள், நெருக்கடிகள் குறித்து கேட்டறிந்துகொண்டனர்.

மட்டக்களப்பு தனியார் விடுதியில் வியாழக்கிழமை (31) இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில், யுத்தத்துக்கு முன்னரும் தற்போதைய காலத்திலும் முரண்பாடுகள் முடிவுற்ற நிலையிலும் சமூகங்களுக்கிடையிலான சவால்கள், நெருக்கடிகள் சகவாழ்வின் சீர்குலைவு பற்றி இதன்போது கருத்து தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக மட்டக்களப்பிலுள்ள காணிப் பிரச்சினைகள் குறித்து அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் சிவில் சமூக ஆர்வலர்கள் விவரித்தனர். சமூகங்களுக்கிடையில் நிலவ வேண்டிய சகவாழ்வின் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

சிவில் சமூக ஆர்வலர்கள் சார்பில் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எம்.புஹாரி முஹம்மத், சிவில் சமூக செயற்பாட்டாளரும் சட்டத்தரணியும் சகவாழ்வு மையத்தின் ஸ்தாபக சிந்தனையாளருமான ஏ.உவைஸ், சிவில் சமூக செயற்பாட்டாளரும் சமூக ஆய்வு எழுத்தாளரும் சுதந்திர ஊடகவியலாளரும் வளவாளருமான ஏ.எச்.ஏ.ஹுஸைன், செயற்பாட்டாளர் முஹம்மத் லியாப்தீன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## ரந்தோலி பெரஹெராவில் ஜனாதிபதி ரணில் பங்கேற்பு

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் ரந்தோலி பெரஹெரா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இப்பெரஹெராவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,ஜனாதிபதியின் பாரியார் பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் கலந்துகொண்டனர்.





படப்பிடிப்பு:லலித் பெரேரா



# கிழக்கு ஆளுநர் பதவியை தமிழருக்கு வழங்கி தொந்தரவுபடுத்தும் அரசாங்கம்

## பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் விசனம்

புளியந்தீவு செய்தியாளர்

கிழக்கு ஆளுநர் பதவியை தமிழருக்கு வழங்கிய அரசாங்கம் மறுபக்கத்தில் அவருக்கு தொந்தரவையும் ஏற்படுத்தியுள்ளது. இது அரசாங்கத்தின் கபடத்தனத்தையே வெளிப்படுத்துகிறதென பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷணன் விசனம் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை, அரசாங்கம் மலையகத் தமிழருக்கு வழங்கியபோது தமிழினம் சந்தோசப்பட்டது. அச் சந்தோஷத்தை நீடிக்க அரசு விடவில்லை. அவரை சுயாதீனமாகவும் கௌரவமாகவும் இயங்கவிடாமல் அவருக்கு எதிராக புத்த பிக்குகளின் ஆர்ப்பாட்டத்தை தூண்டிவிட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் கபடத்தனத்தின் வெளிப்பாடாகும். இதனைப் புரிந்துகொள்ள எமது மக்களுக்கு காலமெடுக்காது.

அரசாங்கம் புத்த பிக்குகளை கைப்பொம்மைகளாக வைத்திருக்கிறது. வேண்டிய வேளைகளில் - வேண்டிய வடிவத்தில் அவர்களை இயங்கச் செய்யும் வல்லமையை அரசு தன்னகத்தே வைத்திருக்கிறது.

மத குருக்கள் வீதியில் படுத்தும் தரையில் உட்கார்ந்தும் ஆர்ப்பாட்டம் செய்ய ஊக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். இச்செயற்பாடு எமது நாட்டின் பௌத்த மதத்துக்கு பாரிய அபகீர்த்தியை ஏற்படுத்தும் என நினைக்கிறேன். இதுபற்றி அரசாங்கத்துக்கு இம்மியளவேனும் கவலையில்லை. தமிழருக்கு கௌரவத்தை கொடுத்து தமிழர்களின் அபிமானத்தை பெற அரசு நினைக்கும் அதேவேளை, தீவிரவாத பௌத்த சிங்களவர்களுக்கும் கை அசைப்பதை நாம் காண்கிறோம். இவையெல்லாம் நீடித்து நிற்கப்போவதில்லை. என்ன நடக்கப் போகிறதென்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

## எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார் ஐ. நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர்




ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் (Marc-André Franche)மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர்களுக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (30) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் இந்நாட்டில் தனது பணியை ஏற்றுக்கொண்டதன் நிமித்தமே இச்சந்திப்பு இடம் பெற்றது.

இந்நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்புக்குமிடையில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

நாட்டில் நிலவிவரும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கு தெரியப்படுத்தினார்.

அவ்வாறே தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை ஒத்திவைத்து அடிப்படை உரிமைகளை மீறி வருவது தொடர்பிலும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளான அசாம் பாக்கீர் மாக்கார், தாரக்க ஹெட்டியாரச்சி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## மஹிந்த ராஜபக்ஷ – ரணில் விக்கிரமசிங்க என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்

### இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க புகழாரம்




கண்டி நிருபர்

முப்பது வருட யுத்தத்தையும் அண்மைக்கால பொருளாதார நெருக்கடியையும் வெற்றி கொண்ட முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இந்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்று இளைஞர் விவகார விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (29) மாத்தளையிலுள்ள அவரது காரியாலயத்தில் பொதுஜன பெரமுனவின் உக்குவளைப் பிரதேச சபைப் பிரிவு கிராமிய மட்டத் தலைவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் ஏற்பட்ட பாரிய இரண்டு பிரச்சினைகளை மேற்படி இருவரும் வெற்றிகொண்டு நாட்டுக்கு சேவையாற்றியுள்ளனர். இது எப்போதும் பொதுமக்கள் மனதில் இருக்கும் - என்றார்.

## சட்டமூலங்களை சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள் சிலவற்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்டு அவற்றை சான்றுரைப்படுத்தினார்.

“பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்),” “ஒதுக்கீடு (திருத்தம்)” மற்றும் “இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம்” எனும் சட்டமூலங்கள் கடந்த 21ஆம் திகதி சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்பட்டன.

இதற்கமைய பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்த) சட்டமூலம் 2023ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமாகவும் ஒதுக்கீட்டு (திருத்த) சட்டமூலம் 2023ஆம் ஆண்டு 12ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டமாகவும் இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்த) சட்டமூலம் 2023ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்த) சட்டமாகவும் கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.



கனடா, டொரண்டோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு ஐயாமணி குருக்கள் விஜயகுமாரபஞ்சாட்சர சிவாச்சாரியாரின் வேதாகம திருமுறைப்பணிகளைப் பாராட்டி “சிவாகமக்கலாநிதி” எனும் விருதையும் கனடா தொழிலதிபர் கணேசன் சுகுமாரின் ஆன்மீகம் மற்றும் மக்கள் தொண்டுகளைப் பாராட்டி “சிவநெறிக்காவலர்”எனும் விருதையும் ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னிதானம் ஆகியோரால் வழங்கப்பட்டன.

## ஹுஸைன் ரஷாத் ஜனாஸா அறக்கட்டளை ஸ்தாபகருக்கு பாராட்டு





பொலிவேரியன் செய்தியாளர்

"ஹுஸைன் ரஷாத் ஜனாஸா அறக்கட்டளையின்"ஐம்பது வருட பூர்த்தியை முன்னிட்டு அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஹுஸைன் ரஷாதை பாராட்க் கௌரவிக்கும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான மலேஷியாவின் உயர்ஸ்தானிகர் பாதில் ஹிஷாம் அதாம், சர்வமதத் தலைவர்களான சாஸ்த்ரபதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக்க தேரர், சாமஸ்ரீ சிவ ஸ்ரீ குமாரசாமி குருக்கள், அஷ்-ஷெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மற்றும் ஆயர் கலாநிதி நிஷான் குரே,ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் பரிஹுல்லாஹ் உட்பட சமூக சேவையாளர்கள், புத்திஜீவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

"ஹுஸைன் ரஷாத் ஜனாஸா அறக்கட்டளை கடந்த 50 ஆண்டுகளுக்குள் "இன, மத, வேறுபாடுகளின்றி 19 ஆயிரம் சடலங்களை அவரவர் மார்க்க அனுஷ்டானங்களுக்கேற்ப தனது சொந்த வாகனத்தில் இலவசமாக எடுத்துச்சென்று நல்லடக்கம் செய்துள்ளது.

இந்நிலையிலேயே மேற்குறித்த அறக்கட்டளையின் ஸ்தாபகரான ஹுஸைன் ரஷாத் மேற்படி நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.

## சட்டவிரோதமாக மதுபானம் வைத்திருந்தவர்கள் கைது



யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் குருநகர் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இயங்கும் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நல்லூர் பகுதியில் கைதுசெய்யப்பட்ட 28 வயதான சந்தேக நபரிடமிருந்து 10 போத்தல் சாராயம் மற்றும் 12 லீற்றர் கசிப்பும் குருநகர் பகுதியில் கைதுசெய்யப்பட்டவரிடம் 25 போத்தல் சாராயமும் இதன்போது கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானைகளின் ஊடுருவலால் மூடப்பட்டது குருக்குளிய பாடசாலை

ஆராச்சிக்கட்டு, குருக்குளிய பிரதேசத்துக்குள் நேற்றுக் காலை 31 காட்டு யானைகள் கூட்டமொன்று உள்நுழைந்ததன் காரணமாக குருக்குளிய மகா வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்களின் பாதுகாப்புக் கருதியே நேற்று பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டதாக அதிபர் தெரிவித்தார்.

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து பிரதேசவாசிகளின் உதவியுடன் காட்டுயானைகள் கூட்டத்தை விரட்ட நடவடிக்கை எடுத்தனர்.




கவிஞர் கலா விஸ்வநாதனின் சித்தரமிர்தம் நூல் வெளியீட்டு விழா கொழும்பு, ஐந்து லாம்புச் சந்தி பழைய நகர மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நூலின் முதற் பிரதியை பட்டிமன்ற புகழ் ஆர்.வைத்தமாநிதியிடமிருந்து மாத்தளை தில்லை ராஜன் பெற்றுக்கொள்வதையும் கவிஞர் ஈழத்து கணேசனுக்கு மாத்தளை தில்லை ராஜன் நினைவுச்சின்னம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சட்டத்தரணிகளான ஜி. சேனாதிராஜா, இரா. சடகோபன் ஊடகவியலாளர் விசு கருணாநிதி ஆகியோரையும் காணலாம் . படங்கள் : எம்.நசார்

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk thamilaneditor@gmail.com

## 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு நிதிப் பெறுபேறுகளை Sகுழுமம் வெளியிட்டுள்ளது

நடப்பு ஆண்டின் இரண்டாம் காலாண்டில் SLT PLC இனால் 2.4% (ரூ. 400 மில்.) வருமான வளர்ச்சி பதிவாகியிருந்த நிலையில், மொபிடெல் 9.3% (ரூ. 1,066 மில்.) சரிவை பதிவுசெய்திருந்தது. எனவே, குழுமத்தின் வருமானம் 2.8% (ரூ. 763 மில்.) இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. SLT PLC வருமான அதிகரிப்பில் புரோட்பான்ட் IPTV மற்றும் நிறுவனசார் வருமான மூலங்கள் பங்களிப்பு செய்திருந்தன. எவ்வாறாயினும், சர்வதேச இடம்மாற்று வருமானம் 90.3% (ரூ. 614 மில்.) குறைவடைந்தமை காரணமாக இந்த அதிகரிப்பும் குறைந்திருந்தது. சர்வதேச இடம்மாற்று வருமானம் என்பது எவ்விதமான எல்லைப் பெறுமதிகளையும் கொண்டிருக்காது என்பதைக் குறிப்பிட வேண்டும். SLT PLC வருமான வளர்ச்சி பிரதானமாக ஃபைபர் வலையமைப்பு மற்றும் வாடிக்கையாளர் வெளியேற்றம் போன்றவற்றினால் தாமதமடைந்தது. மொபிடெல் வருமான வீழ்ச்சியில் வாடிக்கையாளர் இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி பங்களிப்புச் செய்திருந்தது. ஜூன் 2022 முதல் 2023 ஜூன் வரையான காலப்பகுதியில் வாடிக்கையாளர் இருப்பு 1 மில்லியனினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவுகள், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் 15.1% இனால் (ரூ. 2,513 மில்.) அதிகரித்திருந்தது. மொபிடெல் வருமானம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்தாலும் தொழிற்பாட்டுச் செலவுகள் 30.4% இனால் (ரூ. 1,998 மில்.) அதிகரித்திருந்தது. விற்பனைகளுடன் தொடர்புடைய தரகுகளினால் இரண்டாம் காலாண்டில் அதிகளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தன. SLT PLC தொழிற்பாட்டுச் செலவுகள் 5.5% இனால் (ரூ. 619 மில்.) அதிகரித்திருந்தது. இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம், மின்சாரக் கட்டண அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரிப்பினால் ஏற்பட்ட AMC/license செலவுகள் இதில் பங்களிப்புச் செய்திருந்தன.

குழுமத்தின் EBITDA பெறுமதி 31.9% இனால் (ரூ. 3,276 மில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தது. மொபிடெல் EBITDA பெறுமதி 61.9% இனால் (ரூ. 3,064 மில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தமை முக்கிய பங்காற்றியிருந்தது. அதன் பிரகாரம், குழுமத்தின் தொழிற்பாட்டு வருமானம், வரிக்கு முந்திய மற்றும் பிந்திய இலாபம் முறையே 92.7% (ரூ. 3,121 மில்.), 161.3% (ரூ. 6,039 மில்.) மற்றும் 208.0% (ரூ. 4,076 மில்.) ஆகிய பெறுமதிகளால் வீழ்ச்சியடைந்திருந்தன. குறைந்த வருமானம் மற்றும் உயர் தொழிற்பாட்டுச் செலவுகள் போன்றவற்றினால் மொபிடெல்



ரூ. 835 மில்லியன் தொழிற்பாட்டு இழப்பாக பதிவு செய்திருந்தது. காலாண்டில் தேறிய இழப்பு ரூ. 1,390 மில்லியனாகப் பதிவாகியிருந்தது. காலாண்டில் SLT PLC இன் தேறிய இழப்பு ரூ. 1,027 மில்லியனாகும். செலவு அதிகரிப்பு மற்றும் LTE சொத்துகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை போன்றவற்றினால் இந்த இழப்பு பதிவாகியிருந்தது. தொழிற்பாட்டு செலவுகளில் SLT PLC ஊழியர் செலவுகள் 36.8% ஆக பதிவாகியிருந்தன.

SLT குழுமத்தின் வருமான வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ. 52.7 மில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.4% வீழ்ச்சியாகும். நிறுவனமட்டத்தில், SLT வருமானங்கள் 2023ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ. 34.6 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. இது 6.4% வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

மொபிடெல் வருமானம், 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ.1.5 பில்லியன் இழப்பை பதிவுசெய்திருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ. 2.2 பில்லியனினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிர்வாகத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களினூடாக மொபிடெலினால் அதன் வாடிக்கையாளர்கள் இருப்பு மற்றும் வருமானத்தில் ஏற்பட்ட இழப்பை சீர் செய்து கொள்ள முடிந்துள்ளது.

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக ஆர். அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “பொருளாதார நெருக்கடியிலிருந்து நீண்ட மீண்டெழும் செயற்பாடுகள் மொபிடெல் வாடிக்கையாளர்கள் இழப்பு, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் ஃபைபர் வலையமைப்பின் நிதியாக்கல் போன்றன குழுமத்தின் வருமான உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. அரசாங்கத்தின் பெரும்பொருளாதார சீராக்கங்கள் நீண்ட கால அடிப்படையில் நாட்டில் பொருளாதார மீட்சியை தோற்றுவிக்க உதவியாக அமைந்திருக்கும் எனும் போதிலும் ஆரம்பத்தில் வியாபார வளர்ச்சியை பாதிப்பதுடன் வாடிக்கையாளர்களின் பயன்படுத்தக்கூடிய வருமான மட்டங்களை பாதிக்கக்கூடும். ஏற்றத்தாழ்வுகளுடனான நாணயமாற்று வீதங்கள் மற்றும் பணவீக்க வீதங்களால் அதிகரித்துச் செல்லும் தொழிற்பாட்டு செலவுகள் பெருமளவு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. இந்நிலையில், விலையிடல் என்பது மிகவும் முக்கியமானதாக அமைந்திருப்பதுடன் சரியான விலையை தீர்மானிப்பது என்பது அதிகளவு சவால்கள் நிறைந்த விடயமாக அமைந்துள்ளது. இந்நிலை எமது வருமான தோற்றுவிப்பு மற்றும் இலாபகரச் செயற்பாடுகளில் அழுத்தத்தை ஏற்படுத்தும். இந்தச் சூழ்நிலைகளில் மொபிடெல் நிலை அதிகளவு கரிசனையை தோற்றுவித்துள்ளது. அண்மைக் காலங்களில் வங்கிகளின் கடன் வழங்கல் வட்டி வீதங்கள் உயர்வானதாகக் காணப்பட்டதுடன் எல்லைப் பெறுமதிகள் பயன்படுத்தப்படுவதற்கும் நிதியளிப்பை மிகவும் கடினமாக்கியிருந்தன. எவ்வாறாயினும், மத்திய வங்கியினால் அண்மையில் பின்பற்றப்பட்டிருந்த நேர்த்தியான மாற்றங்களின் பிரகாரம் கடன் வழங்கல் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கின்றோம். அதிகரித்த உற்பத்தித்திறனினூடாக நாம் முன்னேற்றத்தை பதிவுசெய்ய எதிர்பார்ப்பதுடன் தற்போதைய பொருளாதார உறுதியற்ற சூழலை கடந்து பயணிக்க எதிர்பார்க்கின்றோம். புத்தாக்கமான தீர்வுகளை வழங்குவது மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பது போன்றவற்றுக்கான எமது அர்ப்பணிப்பு தொடர்ந்தும் சீரானதாக அமைந்திருக்கும்.” -என்றார்.

SLT குழுமத்தின் 2023 ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டு நிதிப் பெறுபேறுகளை கணக்காய்வாளர்களான Ernst and Young நிறுவனத்தினால் LKAS 34, “Interim Financial Reporting” என்பதன் பிரகாரம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டிருந்தது.

## மக்கள் வங்கி, சர்வதேச இளைஞர் தினத்தில் YES Investment Plan என்ற முதலீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

ஓகஸ்ட் 12 ஆம் திகதி கொண்டாடப் பட்ட சர்வதேச இளைஞர் தினத்தை அனுஷ் டிக்கும் வகையில், “Onwards with Green Banking” (பசுமை வங்கிச்சேவை யுடன் முன்னோக்கி) என்ற கருப்பொருளுக் கமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட YES Digital Green Savings Accountஎன்ற டிஜிட்டல் பசுமை சேமிப்புக் கணக்கின் மூலம் மக்கள் வங்கி பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. இந்த நிகழ்வைக் குறிக்கும் விசேட வைபவம் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகி யோரின் தலைமையில் கொழும்பு - 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் தலைமை யகக் கிளையில் அண்மையில் இடம்பெற்றது.









YES Executive Premier Plan” என்ற பெயரிலான முதலீட்டுத் திட்டத்தின் அறிமுகமும் நிகழ்வில் இடம்பெற்றதுடன், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் டெஸ்ட் அணித்தலைவர் மார்வன் அத்த பத்து மற்றும் தற்போதைய டெஸ்ட் அணி யின் துணைத் தலைவர் தனஞ்சய டி சில்வா ஆகியோருக்கு முதலீட்டுத் திட்டங்கள் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட் டுள்ளன. இது தவிர, நிலைபேண்தகு செயற்றிட்டங்களுக்காக பிரத்தியேகமாக வழங்கப்படும் பசுமை மின்வலு கடன் திட்டமும் (Green Power Loan Scheme) அறிமுகப்படுத்தப்பட்டது.

வங்கிச்சேவை மற்றும் சுற்றுச்சூழல் நிலை பேற்றியலை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டமானது, பொறுப்பான நிதி நிறுவனமாக வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டதுடன், மேலும் இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (பரிவர்த்தனை வங்கிச்சேவை மற்றும் வெளி நாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) ரொஹான் பத்திரகே, பிரதிப் பொது முகாமை யாளர் (தனிநபர் வங்கிச்சேவை) ரேணுகா ஜய சிங்க, நிறுவன மற்றும் நிர்வாக முகாமைத் துவ அணிகளின் உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து சிறப்பித் தனர்.

## 5ஆவது ஆசிய இளைஞர் சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களை வலுவூட்டும் n d

உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு ஆடைகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான MAS Holdings இன் துணை நிறுவனமான Bodyline, 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னதாக இலங்கை தடகள சங்கத்துடன் (SLAA) இணைந்து இலங்கை தேசிய தடகள அணிக்கான அதிநவீன விளையாட்டு ஆடைகளுக்கு அனுசரணை வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக உஸ்பெகிஸ்தானின் ஒலிம்பிக் போட்டிகளுக்கு வழிவகுக்கும் அனைத்து பயணங்களுக்குமான உயர்தர விளையாட்டு ஆடைகளை Bodyline வழங்கும்.

Bodyline தயாரித்த விளையாட்டு ஆடைகள் MAS இன் பல தசாப்த கால நிபுணத்துவத்தால் ஈர்க்கப்பட்டு அண்மைய கால தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது. நீலம் மற்றும் தங்க நிறங்கள் கொண்ட ஆடைகளின் கவர்ச்சிகரமான வடிவங்கள் மூலம் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. ஆடைகளில் “கஜசிங்க” உருவமும் இடம்பெற்றுள்ளது. இது யானை மற்றும் சிங்கத்தை இணைத்து வலிமை, புத்தாக்கம் மற்றும் நெகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கிறது. ஐந்தாவது ஆசிய இளைஞர் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை கனிஷ்ட தடகள அணி கஜசிங்கவினால் ஊக்குவிக்கப்பட்ட வடிவமைப்பைக் கொண்ட ஆடைகளை பெருமையுடன் அணிந்தனர்.

இளம் விளையாட்டு வீரர்களுக்கு வலுவூட்டுவதில் Bodyline இன் அர்ப்பணிப்பை இந்த ஒத்துழைப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மிக அண்மையில் ஆசிய சாம்பியன்ஷிப்பில் பங்கேற்ற தேசிய தடகள அணி சிறப்பாக போட்டியிட்டு பல பதக்கங்களை வென்று பல தேசிய சாதனைகளைப் படைத்தது.

Bodyline-SLAA கூட்டணி தேசிய தடகளப் போட்டியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. மேலும் எதிர்வரும் ஆண்டுகளில் SLAA உடனான இந்தக் கூட்டணி மேலும் வலுப்படுத்த Bodyline தயாராக உள்ளது. “ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை தடகள அணிக்கு அனுசரணை வழங்குவதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். இந்தத் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி அவர்கள் வெற்றி பெறுவதை கண்டு மகிழ்கிறோம். அந்த வெற்றிகள் உலகெங்கிலும் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு ஆடை கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்கான எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.” என Bodyline இன் சந்தைப்படுத்தல் மற்றும் வணிக மேம்பாட்டு பணிப்பாளர் தில்ஷான் மொஹமட் கூறினார்.



இந்த அனுசரணைக்கு மேலதிகமாக Bodyline இன் Runner to Runner ஒத்துழைப்பு நடவடிக்கை மூலம் அனைத்து விளையாட்டு வீர - வீராங்கனைகளுக்கும் விளையாட்டு நிபுணர்களுக்கும் சிறந்த ஓடுதல் அனுபவத்தை வழங்க எதிர்பாக்கின்றது. Bodyline இன் அதிநவீன பயோமெக்கானிக்ஸ் (biomechanics) ஆய்வகம் தேசிய ரீதியிலான விளையாட்டு வீரர்களின் பங்கேற்புடன் இயக்கச் செயல் மற்றும் வலி ஏற்படக்கூடிய இடங்களை கண்காணிக்க தரவுகளை சேகரிக்கிறது. Bodyline புத்தாக்கமான தயாரிப்பு யோசனைகளை பரிசோதிப்பதன் மூலம் ஓட்ட வீரர்கள் மற்றும் தினசரி பயன்பாட்டுத் துறைகளுக்கு பரந்த அளவிலான தயாரிப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வகத்தின் பின்னூட்டம் / கருத்து முழுமையாக ஆராயப்பட்டு தொடர்ச்சியான தயாரிப்பு மேம்பாடுகள் மற்றும் புதிய விடயங்கள் உருவாகின்றன. Bodyline தயாரிப்புகள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளன. ஏனெனில், அவை வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் மற்றும் சந்தையில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் தயாரிப்பு மேம்பாடுகளுடன் ஈடுபட்டுள்ளன.

## Arpico Insurance நிறுவனத்தின் புதிய தலைவராக ரமல் ஜாசிங்க நியமனம்

இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற ஆயுள் காப்புறுதி நிறுவனமான Arpico Insurance PLC, அதன் நிறைவேற்று அதிகாரமற்ற தலைவராக ரமல் ஜாசிங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த நியமனம் ஜூலை 5, 2023 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளதுடன் பல வருடங்களாக முல்லுல்ல தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றதையடுத்து பல வருடங்களாக விவில் பெரேரா இந்தப் பதவியை வகித்ததற்குப் பிறகு அந்தப் பதவிக்கு ஜாசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தலைவர் ரமல் ஜாசிங்க



பிரதம நிறைவேற்று அதிகாரி கெலும் சேனாநாயக்க

தனது சமீபத்திய பதவி குறித்து கருத்து தெரிவித்த ரமல் ஜாசிங்க, “குழுமத் தின் தலைவர் கலாநிதி சேன யதேஹிகே மற்றும் Richard Pieris & Company PLC ஆகியோருடன் இணைந்து பணியாற்றுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். குறிப்பாக, எனது சகாவான கலாநிதி கெலும் சேனாநாயக்கவுடன் மீண்டும் பணியாற்றுவதில் நான் மகிழ்ச் சியடைகிறேன். சிரேஷ்ட முகாமைத்து வத்தின் மீதும் அவர்களின் உயர்ந்த திறன்கள் மீதும் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. காப்புறுதித் துறையில் Arpico Insurance நிறுவனத்தை அதிக இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றும் பார்வைக்கு இது உதவும் என்று நான் நம்புகிறேன். இந்தத் தனித்துவமான திறன்கள் மூலம் Arpico Insurance பெயரை மேலும் வலுப்படுத்தவும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கும் மதிப்பு, பாதுகாப்பு மற்றும் சேவையை விரிவுபடுத்தவும் நான் எதிர்நோக்குகிறேன்.” - எனத் தெரிவித்தார்.

Arpico Insurance PLC இன் தலைவராக ரமல் ஜாசிங்கவை நியமிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். காப்புறுதித் துறையில் அவரது விரிவான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்துடன் அவர் ஒரு வெற்றிகரமான பயணத்தை மேற்கொள்வார் என்று நாங்கள் நம்புகிறோம். நிறுவனத்தின் முக்கிய மதிப்புகள் மற்றும் மூலோபாயத்துடன் அவரது அணுகுமுறை மற்றும் நிறுவன சிறப்பிற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவை நன்கு ஒத்துப்போகின்றன. அவரது தலைமையின் கீழ் எமது நிறுவனம் இலங்கையில் மிகவும் நம்பகமான ஆயுள் காப்புறுதி நிறுவனமாக எமது நிலையை வலுப்படுத்தும் வகையில் நீண்ட தூரம் செல்லும்.” - என இந்த நியமனம் குறித்து பிரதம நிறைவேற்று அதிகாரியும் பிரதம அதிகாரியுமான கலாநிதி கெலும் சேனாநாயக்க தெரிவித்தார்.

ரமல் ஜாசிங்க காப்புறுதித் துறையில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு நிபுணர். யூனியன் அஷ்யூரன்ஸில் இருந்து அவரது பயணம் தொடங்கியது. பின்னர் அவர் Fair First Insurance நிறுவனத்திற்கு மாறினார். அவர் ஏஷியன் அலையன்ஸ் இன்சூரன்ஸின் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட முன்னணி பதவிகளை வகித்து துறையில் ஒரு புகழ்பெற்ற நிபுணராக இருந்தார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் MBA பட்டம் பெற்ற இவர் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் புகழ்பெற்ற உறுப்பினராக உள்ளார். மேலும், ரமல் தனது நிர்வாகப் பயிற்சியை அமெரிக்காவின் கலிபோர் னியாவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகம் மற்றும் இந்தியா வின் அகமதாபாத்தில் உள்ள இந்திய முகாமைத்துவ நிறுவனம் (IIM) ஆகியவற்றில் பெற்றார். தனது தொழில் முறை வளர்ச்சிக்காக அர்ப்பணிப் புடன் அவர் UK பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் மூத்த தூதராக தனது தற்போதைய பதவியை வகித்து வருகிறார். அவர் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் (SLIM) கல்விச் சீர்திருத்தக் குழுவிற்கும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

90 வருட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் மிகப்பெரிய பன்முகப்படுத் தப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான Richard Pieris & Company PLC இன் துணை நிறுவனமாக Arpico Insurance PLC தனது வாடிக்கையாளர்களுக்கு சர்வதேச அளவிலான காப்புறுதி தீர்வுகளை வழங்கு கிறது. புதிய தலைவரும் தலைமை நிறைவேற்று அதிகாரியும் காப்புறுதித் துறையில் தங்கள் பலம் மற்றும் பல ஆண்டு களின் வெற்றியைக் கட்டியெழுப்பு வதுடன் மேலும் வளர்ச்சி மற்றும் வெற்றிக் கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை நிரூ பிப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# அஸ்வெசும நிதி கிடைக்கவில்லை; வரிசையில் நின்ற மக்கள் ஏமாற்றம்

கினிகத்தேனை நிருபர்

நாவலப்பிட்டி மற்றும் கினிகத்தேனை பிரதேசங்களில் அரச வங்கிகள், பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுக்கு முன்பாக நேற்று(31) நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு பணம் வைப்பிலிடாத காரணத்தினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அஸ்வெசும நிதி தேர்ந்தெடுத்த பயனாளிக்கு வழங்கப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய அரச வங்கிகளுக்கு சென்றவர்களுக்கு இன்னும் உரியவர்களின் கணக்கில் பணம் வைப்பிலிடப்படவில்லையென தெரிவித்ததையடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏமாற்றத்துடன் சென்றதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் பணம் எப்போது வைப்பிலிடப்படும்



எனக் கேட்டபோது அதற்கும் உரிய பதில் கிடைக்கவில்லையெனக் கவலை தெரிவித்தனர்.



பதுளை அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய வருஷாபிஷேக அலங்கார உற்சவத் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது சுவாமி தேரில் வெளிவீதி உலா வருவதையும் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பங்கேற்றிருப்பதையும் அடியார்களையும் காணலாம்.

# மிருகவேட்டை மின் பொறியில் சிக்கி தாய் மரணம்; மகன் படுகாயம்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

மிருகங்களை வேட்டையாடுவதற்கு வைக்கப்பட்ட மின்சாரப் பொறியில் சிக்கிய திம்பிரிவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய தாய் ஒருவர் நேற்று (31) பலியாகியுள்ளார். இதே விபத்தில் சிக்கிய அவரது மகன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருகங்களை வேட்டையாடுவதற்கு மின்சாரம் பாய்ச்சப்பட்ட வயர்களால் இந்தப் பொறி தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் பொறியை வைத்த 56 வயதான சந்தேக நபர் கைதுசெய்யப் பட்டுள்ளதாகவும் தனமல்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# பெரஹெரா யானை சேதமாக்கிய தலதா மாளிகை வளாகத்திலுள்ள புராதன விடுதி

கண்டி நிருபர்



ஸ்ரீ தலதா மாளிகைக்கும் ஸ்ரீவிஷ்ணு தேவாலயத்துக்கும் அண்மையில் உள்ள புராதன அம்பலம் (விடுதி) ஒன்றை பெரஹெராவில் பங்குகொள்ள வந்த யானை ஒன்று உடைத்துச் சேதமாக்கியுள்ளது.

மெனிக்கின்னே மத்து என்ற பெயரால் அழைக்கப்படும் யானையே அதனை உடைத்துச் சேதமாக்கியுள்ளது. இது பழமைவாய்ந்த ஒன்று என்பதால் அதற்கு புராதனப் பெறுமதி ஒன்று உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனைப் பார்வையிட்ட ஸ்ரீவிஷ்ணு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே மகேந்திர ரத்வத்தை அதனைப் புனரமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளதாகவும் ஸ்ரீ தலதா மாளிகை நிர்வாகம் தெரிவித்தது.

# பழைய மாணவர் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு



கண்டி நிருபர்

கம்பளை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) தெரிவுசெய்யப்பட்டனர்.

கம்பளை இந்துக் கல்லூரி அதிபர் ரகுவரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு,

தலைவர்- அதிபர் ரகுவரன், துணைத் தலைவர்- அசோக், செயலாளர் - கார்த்திக், துணைச் செயலாளர் - தினேஷ், பொருளாளர் - வெங்கடேஷ், துணைப் பொருளாளர் - வினோத் பிரசன்னா ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக கிரிஜன், துவாரகேஷ், அருண், லோகேஷ், மதிரூபன், மேர்வின் ஆகியோரும் தெரிவாகினர்.

சங்கத்தின் ஆலோசகர்கள் ஜெயபிரகாஷ், சிவரூபன், வதன், கமலபதி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# சிங்கள அரச ஊழியர்களுக்கான தமிழ் மொழிமூல பயிற்சிநெறி ஆரம்பம்

இரத்தினபுரி நிருபர்



சப்ரகமுவ மாகாண சிங்கள அரச ஊழியர்களுக்கான தமிழ் மொழிமூல பயிற்சி நெறி செவ்வாய்க்கிழமை(29) இரத்தினபுரி புஸ்ஸல்ல முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் ஆரம்பமானது.

மேற்படி பயிற்சி நெறி மொழி பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் பி.பரமசிவம் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

வாரத்தில் இரண்டு நாட்கள் மாத்திரம் நடைபெற்று வரும் மேற்படி பயிற்சிநெறியானது மொத்தம் 150 மணித்தியாலங்கள் முடியும்வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஆரம்ப நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதி பிரதான செயலாளர் சுசிலா ராஜபக்ஷ, உதவிச் செயலாளர் நிஷந்த சமன் குமார, மொழி பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் பி.பரமசிவம் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# வீதி திறந்துவைப்பு



இரத்தினபுரி நிருபர்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட களவான வரதல்கொட கொடிப்பீலிகந்த - கெலிங்கந்த வீதி அண்மையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புரவினால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலவானை பிரதேச சபையின் முன்னாள் தலைவர், உபதலைவர், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், மாகாண வீதி அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடல் பணிப்பாளர், பிரதான பொறியியலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கவிஞர் சூரியநிலாவின் ஐந்து நூல்கள் வெளியீடு



சாவகச்சேரி நிருபர்

பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் கவிஞருமான ஆ.ஜென்சன் றொனால்ட் (சூரிய நிலா) எழுதிய "காப்பு, வனப்பு, திறப்பு, விழிப்பு மற்றும் உயிர்ப்பு'' ஆகிய ஐந்து நூல்களின் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் (30) பிற்பகல் கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.சுதோகுமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து சிறப்பித்திருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கனடா, வள்ளுவன் வழி உலக இணையப்பள்ளியைச் சேர்ந்த திருமதி ஜோதி ஜெயக்குமார், உசன் பவுண்டேசன் அமைப்பின் உப தலைவர் வைத்திய கலாநிதி ஜெபநாமகணேசன் மற்றும் சாவகச்சேரி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.சிவசுதன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது 'காப்பு' என்ற உணவுப் பாதுகாப்பு சுகாதார மேம்பாட்டு நூலுக்கான திறனாய்வு உரையை வைத்திய கலாநிதி சுதோகுமாரும் 'வனப்பு' கவிதைத் தொகுதி நூலுக்கான திறனாய்வு உரையை திருமதி ஜோதி ஜெயக்குமாரும் 'திறப்பு' என்ற நேர்வய சிந்தனைகள் நூலுக்கான திறனாய்வை வைத்திய கலாநிதி ஜெபநாமகணேசனும் 'விழிப்பு' என்ற தொற்றா நோய்த் தடுப்பு சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வை வைத்திய கலாநிதி க.சிவசுதனும் மற்றும் 'உயிர்ப்பு' என்ற தாய் சேய் நலன் சார்ந்த சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வு உரையை வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரனும் வழங்கி நூல்களை வெளியிட்டனர்.

மேலும் நிகழ்வில் வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவகர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# குறிகட்டுவான் இறங்குதுறைக்கு கனரக வாகனம் செல்லத் தடை

யாழ். நிருபர்

குறிகட்டுவான் இறங்குதுறையின் கீழ்ப்பகுதியில் இருக்கும் இரும்புகள் துருப்பிடித்து வலுவிழந்து காணப்படுவதனால், கனரக வாகனங்கள் செல்வதற்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குரூஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் செல்வோர் குறிகட்டுவான் இறங்குதுறைக்குச் சென்றே அங்கிருந்து படகில் தீவுகளுக்கு பயணிப்பார்கள். பயணிகள் மாத்திரமின்றி பொருட்களும் இந்த இறங்குதுறை ஊடாகவே தீவுகளுக்கு கொண்டுசெல்லப்படும்.

இறங்கு துறை பகுதிக்கு மனித வலுவைப் பயன்படுத்தி பொருட்களை கொண்டுசென்று படகுகளில் ஏற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

அடுத்த வாரம் கப்பல் கட்டுமானம் தொடர்பான விசேட குழு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது. அந்தக் குழுவுடன் இணைந்து இறங்குதுறை தொடர்பில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரையில் இறங்குதுறை பகுதிக்கு கனரக வாகனங்கள் செல்லத் தடை விதித்துள்ளோம் - என்றார்.

# மனைவியை வாள்முனையில் கடத்தி சென்றவருக்கு எதிராக முறைப்பாடு

யாழ். நிருபர்

தனது மனைவியை வாள்முனையில் கடத்திச் சென்ற கணவனுக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், குடத்தனை பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (29) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மனைவி கணவனை விட்டுப் பிரிந்து குடத்தனையிலுள்ள தனது தாய் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் மனைவி தங்கியிருந்த குடத்தனை வீட்டுக்கு வாளுடன் சென்ற கணவன் மனைவியை வாள்முனையில் கடத்திச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் கடத்தப்பட்ட பெண்ணின் தாயார் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மன்னாரில் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

மன்னார் நகர் நிருபர்

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம், மன்னார் உப்புக்குளம் மற்றும் மூர் வீதி பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் போதை மாத்திரைகள் மற்றும் போதைப்பொருள் அடங்கிய சிகரெட்டுடன் நேற்று முன்தினம் (30) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் மன்னார் உப்புக்குளம் மற்றும் மூர்வீதி பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயது இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களது உடமையிலிருந்து DAVIDOFF சிகரெட் 09, PREGAB 150mg card 04, Tablet 40, GABIN 75 mg card 12, Tablet 120 கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.




# செல்வச்சந்நிதியில் 25 பவுண் நகை திருட்டு

யாழ். நிருபர்

செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட, பக்தர்களின் 25 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் (30) நடைபெற்றது. அதன்போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

அவ்வேளையில் சன கூட்டத்தைப் பயன்படுத்தி திருடர்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தோரின் நகைகளைத் திருடியுள்ளனர்.

நகைதிருட்டுகள் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு 11 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. முறைப்பாட்டின் பிரகாரம் சுமார் 25 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளைக்கு புதிய நிர்வாகத் தெரிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்ட கிளையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் (30), கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவின் தலைமையில், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பணிமனையான அறிவகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச கிளைகளினதும் நிர்வாகிகள், மாவட்ட மாதர் முன்னணி மற்றும் வாலிபர் முன்னணி நிர்வாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தின்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்ட கிளையின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் செயலாளராக வீரவாகு விஜயகுமாரும் பொருளாளராக செல்வி அன்பழகி செல்வரட்ணமும் துணைத் தலைவராக வடமாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜாவும் துணைச் செயலாளராக பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மாவட்ட கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி கலைவாணி சிறீகாந்தன், திருமதி குணலக்சுமி குலவீரசிங்கம், திருமதி சிவயோகலட்சுமி சந்திரபோஸ், செல்வி.சுபிதா வேலாயுதபிள்ளை, திருமதி உதயராணி சத்தியசீலன், பரமலிங்கம் பாஸ்கரன், சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், கருப்பையா ஜெயக்குமார், சின்னையா தவபாலன், சுப்பிரமணியம் சுரேன் ஆகிய பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இத்தெரிவுக் கூட்டத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் நெறிப்படுத்தி நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாக். அணிக்கு அபார வெற்றி: பாபர் புதிய சாதனை




ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமான நிலையில், முதல் லீக் ஆட்டத்தில் நேபாள அணியை எதிர்கொண்ட பாகிஸ்தான் அணி 221 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாக். அணியில் பாபர் அசாம் - இப்திகார் அஹமட் இருவரும் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவித்தனர். இப்திகார் 43 பந்துகளில் அரைசதம் அடித்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய பாபர் அசாம் 109 பந்துகளில் சதம் அடித்தார். இதன் பின்னர் பாபர் அசாம், இப்திகார் அகமது இருவரும் இணைந்து பந்துகளை சிக்சருக்கு பறக்க விட்டனர். குறிப்பாக, இப்திகார் 67 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். இறுதியில் பாகிஸ்தான் 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 342 ஓட்டங்களை எடுத்தது. பாபர் அசாம் 151 ஓட்டங்கள், இப்திகார் அகமது 109 ஓட்டங்களை எடுத்தனர்.

பதிலெடுத்தாடிய நேபாள அணி 23.4 ஓவர்களில் 104 ஓடடங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் பாகிஸ்தான் அணி 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பாகிஸ்தான் சார்பில் ஷதாப் கான் 4 விக்கெட், ஷஹீன் ஷா அப்ரிடி, ஹரிஸ் ரவுப் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

பாபர் அசாம் ஒருநாள் கிரிக்கெட்டில் 19 ஆவது சதத்தைப் பெற்றார். 102 இன்னிங்ஸ் விளையாடி 19 சதங்களைப் பதிவு செய்ததன் மூலம் அவர் சாதனை படைத்தார். இதற்கு முன் ஹசீம் அம்லா - 104 இன்னிங்ஸ், விராட் கோஹ்லி - 124 இன்னிங்ஸ் ஆடி 19 சதங்களைப் பதிவு செய்தனர்.

# நியூசிலாந்தை இலகுவாக வீழ்த்திய இங்கிலாந்து

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் ரி 20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், இங்கிலாந்து அணி இலகுவெற்றி பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர் 140 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து, 14 ஓவரில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

டேவிட் மலான் 54 ஓட்டங்களும், ஹாரி ப்ரூக் 43 ஓட்டங்களும் விளாசினர். 4 போட்டிகள் கொண்ட ரி 20 தொடரின் 2ஆவது போட்டி இன்று நடைபெற இருக்கிறது.



# ஆடவருக்கும், மகளிருக்கும் ஒரே சம்பளம் - இங். கிரிக்கெட் சபை முடிவு

இங்கிலாந்து கிரிக்கெட் வீராங்கனைகளுக்கு அந்த நாட்டு ஆடவர் கிரிக்கெட் அணி வீரர்களுக்கு நிகராக ஊதியம் (போட்டிக் கட்டணம்) வழங்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து பெண்கள் அணியின் ஆட்டத்தை நேரில் காண வரும் ரசிகர்களின் எண்ணிக்கை மற்றும் தொலைக்காட்சியில் போட்டியை பார்ப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருப்பதையடுத்து அந்த நாட்டு கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த வாரத்தில் நடைபெறும் இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டித் தொடரில் இருந்து இங்கிலாந்து வீராங்கனைகளுக்கான ஊதிய உயர்வு அமுலுக்கு வருகிறது. ஏற்கனவே இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் கிரிக்கெட் வீரர்களுக்கு இணையாக வீராங்கனைகளுக்கும் போட்டிக் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் இங்கிலாந்தும் இணைகிறது.

# பாடுமீன் கிரிக்கெட் சமரின் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்ட மட்./வின்சன்ட் உயர்தர பாடசாலை




மட்டக்களப்பு, வாழைச்சேனை நிருபர்கள்

மூன்று வருடங்களின் பின் இடம்பெற்ற 10ஆவது பாடுமீன் கிரிக்கெட் சமரின் சம்பியன் கிண்ணத்தை மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர பாடசாலை சுவீகரித்துக் கொண்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவும், விசேட அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும் கலந்து சிறப்பித்துள்ளனர். இச்சமரின் சிறந்த பெண் வீராங்கனையாகவும் சமரின் சிறந்த துடுப்பாட்ட வீராங்கனையாகவும் வின்சன்ட் உயர்தர தேசிய பாடசாலை அணியின் தலைவி சானுஜா கமலேஸ்வரன் தெரிவாகியதுடன், சமரின் சிறந்த பந்துவீச்சாளராக சிசிலியா பெண்கள் கல்லூரியின் வீராங்கனை ஈ.மெருஷா தெரிவாகினார்.இவர்களுக்கான கிண்ணங்கள் அதிதிகளினால் வழங்கிவைக்கப்பட்டன.

சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த வின்சன்ட் அணியினருக்கும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சிசிலியா அணியினருக்குமான பணப்பரிசில் உள்ளிட்ட வெற்றிக் கிண்ணங்கள் இதன்போது அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வலயக்கல்வி அலுவலகத்தின் அதிகாரிகள், வின்சன்ட் உயர்தர மகளிர் தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி.திருமகள் உதயகுமார், இரண்டு பாடசாலைகளின் பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி



கோணாவத்தை செய்தியாளர்




அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையின் இல்ல விளையாட்டு விழா அண்மையில் அக்கரைபற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நிறுவனத்தின் கற்கைகள் பணிப்பாளர் எம்.எ.தஷ்ரீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எ.எம்.நவாஸ் பிரதம அதிதியாகாக கலந்துகொண்டு நிகழ்வுகளைத் தொடக்கி வைத்தார்.

மிகச் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இந்த விளையாட்டு விழாவில் சிவப்பு, பச்சை, மஞ்சள் இல்லங்கள் பங்குபற்றின. குறுகிய நேரத்தில் சிறுவர்கள் சுயமாகவே பாடசாலைக்கு வெளிக்கிட்டுச் செல்வது, சிறுவர்களுக்கான கயிறிழுத்தல் போட்டி, இருந்து கொண்டு பலூன் உடைத்தல் போன்ற போட்டிகள் பெற்றோர் களைக் கவரும் நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

இந்நிகழ்வில் பிரதம அதிதி ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எ.எம்.நவாஸ், வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான விருதுகளை வழங்கி வைத்தார். நிறுவனத்தின் நிதித்துறைப் பணிப்பாளர் எம்.எஸ்.சக்கி, அதிபர் ஏ.ஜி. அன்வர், நிர்வாகச் செயலாளர் எம்.சாலீம் போன்றோர்கள் இந்நிகழ்வை சிறந்தமுறையில் ஒழுங்குசெய்திருந்தனர்.



# 40 வருட ஆசிய கிண்ண வரலாற்றில் நடக்காத சம்பவம்

ரமணி

1984இல் துவங்கி இதுவரை சுமார் 40 வருட வரலாறு கொண்ட இத்தொடரில் ஆசிய கண்டத்தின் பரம எதிரிகளாகக் கருதப்படும் இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரு முறை இறுதிப் போட்டியில் மோதியதில்லை என்பது தனித்துவமான புள்ளிவிவரமாக இருந்து வருகிறது.

கபில் தேவ், சுனில் கவாஸ்கர் சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி எம்.எஸ். டோனி, விராட் கோஹ்லி, இம்ரான் கான், வாசிம் அக்ரம், இன்சமாம், அப்ரிடி, பாபர் அசாம் என வீரர்களைக் கொண்ட இரு நாடுகளும் இதுவரை ஒரு முறை கூட ஆசியக் கிண்ண வரலாற்றில் இறுதிப் போட்டியில் விளையாடியதில்லை.

1984 இல் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடராக நடைபெற்ற இத்தொடரை 2 – 1 என்ற கணக்கில் இந்தியா வென்றது. அதன் பின் 1986இல் இலங்கை – பாகிஸ்தான், 1988இல் இந்தியா – இலங்கை, 1990இல் இந்தியா – இலங்கை, 1995இல் இந்தியா – இலங்கை, 1997இல் இலங்கை – இந்தியா, 2000இல் பாகிஸ்தான் – இலங்கை, 2004இல் இலங்கை – இந்தியா, 2008இல் இலங்கை – இந்தியா, 2010இல் இலங்கை – இந்தியா, 2012இல் பங்களாதேஷ் – பாகிஸ்தான், 2014இல் பாகிஸ்தான் – இலங்கை, 2016இல் இந்தியா – பங்களாதேஷ், 2018இல் இந்தியா – பங்களாதேஷ், 2022இல் இலங்கை – பாகிஸ்தான் ஆகியவை இறுதிப் போட்டியில் மோதியுள்ளன.

கடந்த முறை இந்தியா – பாகிஸ்தான் மோதும் என்று எதிர்பார்க்கப்பட்ட போது உள்ளே புகுந்த இலங்கை சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. எனவே, இம்முறையாவது இந்தியாவும் பாகிஸ்தானும் இறுதிப் போட்டியில் மோதுமா என்ற எதிர்பார்ப்பு இருநாட்டு ரசிகர்களிடமும் காணப்படுகிறது.






# ருத்ரதாண்டவமாடிய மார்ஷ் - டேவிட் ஜோடி

தென்னாபிரிக்கா- அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட தொடரின் முதல் ரி 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 226 ஓட்டங்களைக் குவித்தது. மிட்செல் மார்ஷ் அதிகபட்சமாக 49 பந்துகளில் 92 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டிம் டேவிட் 28 பந்துகளில் 64 ஓட்டங்களைச் சேர்த்தார்.

பின்னர் 227 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா 15.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 115 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் அவுஸ்திரேலியா 111 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரி 20 தொடரின் 2 ஆவது போட்டி இன்று டர்பனில் நடக்கிறது.

# விளையாட்டுத் துளிகள்

பங்களாதேஷ் அணியின் முன்னணி வீரரான லிட்டன் தாஸ் ஆசிய கிண்ணத் தொடரில் இருந்து முழுவதுமாக விலகியுள்ளார். வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள லிட்டன் தாஸ், இன்னும் அதிலிருந்து முழுமையாக குணமடையவில்லை. அவருக்குப் பதிலாக அனாமுல் ஹக் பிஜோய் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

..............................

செஸ் உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கம் வென்ற இந்தியாவின் இளம் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவின் பெற்றோர், நாகலட்சுமி மற்றும் ரமேஷ்பாபு ஆகியோருக்கு ஒரு எக்ஸ்யூவி 4 ஓஇவி எலக்ட்ரிக் கார் ஒன்றை பரிசளிக்கப் போவதாக மஹிந்திரா குழுமத்தின் தலைவர் ஆனந்த் மஹிந்திரா அறிவித்துள்ளார்.

..............................

பீபா மகளிர் உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் ஸ்பானிஷ் கால்பந்து சங்கத் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் நட்சத்திர வீராங்கனை ஜென்னி ஹெர்மோசோவின் உதட்டில் முத்தமிட்டு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியமை பெரும் சர்ச்சையாக வெடித்தது. இந்நிலையில், ஒட்டுமொத்த நாடும் தமது மகனுக்கு எதிராக இருப்பதாக கூறி, ரூபியேல்ஸின் தாயார் தேவாலயம் ஒன்றில் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளார். மேலும், தமது மகன் ஒழுக்கமானவன் என்பதால் நீதிக்காக இறக்கவும் தயாராக இருக்கிறேன் என அந்தத் தாயார் குறிப்பிட்டுள்ளார்.

..............................

உதட்டு முத்த விவகாரத்தில் சிக்கிய ஸ்பெயின் கால்பந்து சங்கத்தின் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸின் தாயார் தமது உண்ணாவிரதப் போராட்டத்தின் மூன்றாவது நாளில் திடீரென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தமது மகனுக்கு எதிரான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக 72 வயதான தயார் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். தேவாலயம் ஒன்றில் நுழைந்த அவர் அங்கிருந்து வெளியேறவும் உணவருந்தவும் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7